ISSN 1391-9504

# விஜய்

Wijey - විජේයි

20-12-2004 - மலர் 01, இதழ் 19

## நத்தார் வாழ்த்துக்கள்!




விலை
ரூபா: 10/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியச் சோலை

கவிச் சித்திரங்கள் 3

தயாரிப்பு: நவசீலன்

# கூழுக்குப் பாடிய ஒளவையார்!

ஓர் ஊரில் சிலம்பி எனும் ஒரு பெண் இருந்தாள். அவளுக்குக் கவிச் சக்கரவர்த்தி கம்பர் தன் வாயால், தன்னைப் பாடவேண்டும் என்னும் ஓர் ஆசை ஏற்பட்டது. அதன்படி அவள் கம்பரைச் சந்தித்துத் தன்னைப் பற்றி ஒரு கவி பாடும்படி கேட்டாள். கம்பரோ ஆயிரம் பொன் தந்தால் தான் பாடுவேன். என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அவளோ தன் வீட்டில் இருந்த பொருட்களையெல்லாம் விற்றும் அவளுக்கு ஐந்நூறு பொன் மட்டுமே கிடைத்தது. அதனைக் கொண்டு போய்க் கம்பரிடம் கொடுத்தாள். கம்பர் அதனைப் பெற்றுக் கொண்டு-

"முழுப்பாட்டுக்கு ஆயிரம் பொன் தர வேண்டும். நீ கொடுத்ததோ ஐநூறு பொன். ஐநூறு பொன்னுக்கு அரைப் பாட்டுத்தான் பாடுவேன்" என்று கூறி அவள் வீட்டு வாசலின் உச்சியில் இரண்டு வரிகளை மட்டும் பின்வருமாறு எழுதினார். அது வருமாறு,

"தண்ணீரும் காவிரியே
தார் வேந்தன் சோழனே
மண்ணாவது சோழ மண்டலமே"

இப்படி எழுதி வைத்து விட்டுப் போய்விட்டார். வீட்டிலிருந்த பொருட்களையெல்லாம் விற்றுவிட்ட படியால் சிலம்பி மிகுந்த வறுமை நிலைமைக்குத் தள்ளப்பட்டுக் கஞ்சிக்கே வழியில்லாத நிலைக்கு ஆளானாள். கம்பரின் வாயால் தன்னைப் பாட வேண்டும் என்று ஆசைப்பட்டதை நினைத்து, நினைத்து வருந்தினாள். அப்படிப் பாடச் செய்தும் அந்த அரைப்பாட்டிலும் தன் பெயர் இடம் பெறவில்லையே என்பது அவளுக்கு இன்னொரு கவலையாக இருந்தது.

இப்படியிருக்கையில் ஒருநாள் ஊழ்வினையாலோ? என்னவோ? ஒளவையார் மிகவும் களைப்படைந்து வெயிலில் நடக்க முடியாமல் நடந்து வந்தார். சிலம்பியின் வீட்டுக்கு அருகில் வந்ததும் சிறிது நின்றார். பின்னர் சிலம்பியின் வீட்டு வாசலுக்குச் சென்று-

"அம்மா, ஒரே களைப்பாக இருக்கிறது. குடிப்பதற்குக் கொஞ்சம் கூழாவது, கஞ்சியாவது தருவாயா?" என்று கேட்டார்.



அதைக்கேட்ட சிலம்பி உள்ளே ஓடிப்போய் ஒரு குவளையில் (கம்பருக்காக வீட்டிலிருந்த பொருட்களையெல்லாம் விற்றதன் பின்னர் அவள் வீட்டில் மிகுதியாக இருந்த ஒரு சில பொருட்களில் அந்தக் குவளையும் ஒன்று) கொஞ்சம் கூழ் ஊற்றிக் கொண்டு வந்து கொடுத்தாள். ஒளவையார் ஆவலுடன் அதனை வாங்கிக் குடிக்கலானார். குடிப்பதற்காகத் தலையை நிமிர்த்திய போது வீட்டு வாசலில், உயரத்தில் கம்பர் எழுதி வைத்திருந்த அந்த இரண்டு வரிகளைப் பார்த்து விட்டார். சிலம்பியிடம் அதனைக் காட்டி,

"என்னம்மா இது?" என்று கேட்டார்.

சிலம்பியும் கம்பரிடம் தன்னைப் பாடச் சொல்லி வீட்டிலுள்ள பொருட்களையெல்லாம் விற்றதையும், கம்பர் ஐந்நூறு பொன்னும், அரைப்பாட்டும் பாடியதையும் விளக்கிக் கூறினாள். உடனே ஒளவையார் சிலம்பியின் பெயரும் இடம் பெறும் வகையில் அந்தக் கவிதையில் இன்னும் இரண்டு வரிகளை எழுதிக் கவிதையைப் பூர்த்தி செய்தார். அந்த இரண்டு வரிகள் இப்படி அமைந்தன-

"பெண்ணாவாள், அம்பற் சிலம்பி
அரவிந்தத்தால் அணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

இப்படி இரண்டு வரிகளை எழுதிக் கம்பர் எழுதிய கவிதையைப் பூர்த்தி செய்தார்.

ஒளவையார் கவிதையைப் பாடி முடிக்கும் போது தலையிலிருந்து கால்வரை தங்க வைர ஆபரணங்கள் அணிந்த செல்வச் சீமாட்டியாக மாறி விட்டாள் சிலம்பி. அவளைப் பீடித்திருந் வறுமையும் நீங்கியது.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகுதான் ஒளவையாருக்குக் "கூழுக்குப் பாடி" என்னும் ஒரு பட்டப் பெயரும் உண்டாயிற்று.

## நலம் பெற

அன்பே தெய்வம்
அதுவே சமயம்
என்றே நினைத்தால்
ஏது துன்பம்
நன்றே செய்வோம்
நலமே பெறுவோம்
இன்றே செய்தால்
இனிதே வாழ்வோம்
மெய்யே சொல்வோம்
மேன்மை பெறுவோம்
ஐயோ பொய்யே
அழிவாய் என்போம்
பொன்னான வாழ்வைப்
போராடிக் கழியோம்
ஒன்றாக வாழ்ந்து
ஒற்றுமை காப்போம்.

-ரூபராணி-

## ஈரானில் "யுரேனியம்" தயாரிப்பு நிறுத்தம்!



ஈரான் நாடு தனது யுரேனியம் உற்பத்தி ஆலைகள் அனைத்தையும் மூடிவிடத் தீர்மானித்திருப்பதாக அறிவித்துள்ளது.

ஈரான் நாட்டில் நச்சு ஆயுதங்கள் தயாரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையினால் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த தேடுதல் பணி தொடர்பான அறிவித்தல் வருவதற்கு முன்பாக ஒரு தந்திரோபாய நடவடிக்கையாகவே ஈரான் மேற்படி அறிவிப்பை வெளியிட்டுள்ளதாகக் கருதப்படுகின்றது. இதனால் ஈரானில் நச்சு இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கப்படுகின்றது என்ற அமெரிக்காவின் குற்றச்சாட்டும் பிசுபிசுத்துப் போயுள்ளது. ஈரானின் மேற்படி முடிவினை ஐரோப்பிய ஒன்றியமும் வரவேற்றுள்ளதோடு, ஈரானுக்குத் தேவையான சகல விதமான உதவிகளையும் வழங்குவோம் எனவும் பிரித்தானியப் பிரதமர் டொனி பிளேயர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், இது தொடர்பாக மேலதிகத் தகவல்களை வெளியிட்டுள்ள ஈரான், யுரேனியம் தயாரிப்பினை தற்காலிகமாகவே நிறுத்தியுள்ளதாகவும், அவசியப்படும் பட்சத்தில் யுரேனியத்தைச் சுத்திகரித்துத் தயாரிக்கும் உரிமை தமக்கு இருப்பதாகவும், ஆனால் நச்சு இரசாயன ஆயுதங்களைத் தயாரிப்பதாக ஈரான் மீது அமெரிக்காவின் குற்றச்சாட்டைத் தாம் மறுப்பதாகவும் அறிவித்துள்ளது.

ஈராக்கில் நச்சு இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை முன்னிறுத்தியே ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்திருந்தது போல், இதே குற்றச்சாட்டை ஈரான் மீதும் சுமத்தி, ஈரானுக்கு எதிராகப் போரைக் கட்டவிழ்த்து விட அமெரிக்கா எண்ணியுள்ள ஒரு தருணத்தில், யுரேனியத் தயாரிப்பு ஆலைகள் அனைத்தையும் மூடிவிட ஈரான் எடுத்துள்ள தீர்மானத்தினால் அமெரிக்காவின் தந்திரோபாய நகர்விற்கு பெரும் பின்னடைவை, ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல: 08, ஹூனுபிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2314714
பெக்ஸ்: 2314968

## பிள்ளைகளின் உலகமும், பெரியவர்களின் உலகமும்.

குழந்தைகள் அல்லது பிள்ளைகளின் உலகம் வித்தியாசமானது, மாறுபட்டது என்று கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால், அது எப்படி இருக்கும் என்று நாம் சிந்தித்துப் பார்த்திருப்போமா? அந்த உலகம் மிகவும் அழகானது. ரம்மியமானது. வர்ணங்கள் நிறைந்தது. பொய்கள், பித்தலாட்டங்கள், சதிகள், சூழ்ச்சிகள், ஏமாற்றுக்கள் இல்லாதது. ஆதலால் தான் குழந்தைகளை 'அவர்கள் உலகத்தில்' அவர்கள் எப்படி இருப்பார்களோ, அப்படியே இருக்க விட்டு விட வேண்டும், என்று உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

பெரியவர்கள் பிள்ளைகளை அவர்களின் உலகத்தில் வாழ அனுமதிப்பதில்லை என்று குற்றச் சாட்டுச் சுமத்தப்படுகின்றது. இவ்விதம் குழந்தைகளையும், பிள்ளைகளையும் அவர்கள் உலகத்தில் வாழ விடாமல் தடுத்து, இடையீடு செய்து அவர்களைப் பெரியவர்களின் உலகத்துக்குள் அழைத்து வந்து விடுவதால் பிள்ளைகள் எவ்வாறு உருவாக வேண்டுமோ அவ்வாறு உருவாகாமல் போகிறார்கள் என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அப்படியானால் பிள்ளைகளை அவர்களது உலகத்தில் வாழ அனுமதித்தல் என்பதன் [illegible]து என்ன? அதற்கான முதலாவது தேவை அவர்களது விருப்பத்துக்கு மாறாக எந்தச் செயலையும் செய்யும்படி நிர்ப்பந்திக்காமல் இருப்பதுதான். பொதுவாக வீடுகளில் பிள்ளைகளை இதைச் செய்!, அதைச் செய்!, அல்லது இதைச் செய்யாதே!, அதைச் செய்யாதே! என்று கட்டளை இட்டுக் கொண்டே இருப்பார்கள். இப்படி நடந்து கொள்வதை விடச் சரியான செயலொன்றைச் செய்வது தொடர்பில் வழிகாட்டுவதும், [illegible]றான செயலொன்றைச் செய்வதால் ஏற்படும் [illegible]கமான விளைவுகளைச் சொல்லிக் கொடுப்பதும்தான் பெரியவர்களால் செய்யப்பட வேண்டிய கடமைகள். அதன் பின் பிள்ளைகள் எதைச் செய்யவேண்டும் என்பதைத் தாமே தீர்மானிப்பார்கள்.

இவ்விதம் அவர்கள் எடுக்கும் தீர்மானங்கள் தான் அவர்களது எதிர்கால வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பிள்ளைகள் எடுக்கும் தீர்மானங்கள் அல்லது அவர்களுக்கு ஏற்படும் மனப்பதிவுகள் சமூகத்தின் உயர்வுக்கு மிக அவசியமானவைகளாகும். இருபதாம் நூற்றாண்டின் மனித அழிவுகளுக்குக் காரணமாக இருந்த அடோல்ப் ஹிட்லர் பிள்ளைப் பருவத்தில் ஓவியம் வரைவதில் திறமையுடையவராக இருந்தார். அவர் ஏழையாக இருந்ததால் அவர் சித்திர வகுப்பில் இருந்து நீக்கப்பட்டார். அவருக்குப் படிக்கவோ, ஓவியம் வரையவோ சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. அவர் சமூகத்தையும், உலகத்தையும் பழிவாங்க வேண்டுமென்ற தீர்மானத்தை அப்போதே தன் மனதில் பதித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று மனோவியலாளர்கள் கூறுகின்றனர். ஹிட்லர் வரைந்த ஓவியங்கள் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவர் சிறு வயதில் சித்திரம் வரைய அனுமதிக்கப்பட்டிருந்தால் பெரும் கொடுங்கோலனாகவன்றிச் சிறந்த சித்திரக் கலைஞனாக வந்திருக்கக் கூடும் என்பது மனோவியலாளர்களின் நம்பிக்கை.

- ஆசிரியர்

## பற்சிகிச்சையைப் பெறுவதில் மாணவர்கள் அசிரத்தை

பாடசாலை மாணவர்கள் மத்தியில், பற்சிகிச்சை அவசியப்படும் நிலையில் 70 வீதமான மாணவர்கள் தற்போது இருக்கின்ற போதிலும், இதில் 3 வீதமானோரே பற்சிகிச்சைகளைப் பெறுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. மாணவர்களுக்குப் போதிய அறிவுறுத்தல்கள் இல்லாமையினாலும், பற் கோளாறுகள் இருப்பது சரிவர இனங்காணப்படாமையினாலுமே இம் மாணவர்கள் இதில் ஆர்வமின்றிக் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.
ஆரம்பக் கட்டங்களிலேயே உரிய சிகிச்சைளை வழங்கினால், பாரிய அளவிலான சிகிச்சைகளை மேற்கொள்ளத் தேவை எழாது எனவும் கூறப்படுகின்றது. எனவே, இது குறித்து மாணவர்களை ஆர்வப்படுத்தி, தெளிவுப்படுத்துமாறு பாடசாலை நிர்வாகங்களும் கேட்கப்பட்டுள்ளன.

## பாராளுமன்றக் கட்டிடத்தில் கண்காட்சிக் கூடம்

பாராளுமன்றத்தைப் பார்வையிட வருகின்ற பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி, முன்னாள் சபா நாயகர்கள் பாவித்த பொருட்களைப் பார்வைக்கு வைக்கும் கண்காட்சிக் கூடமொன்று பாராளுமன்றக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.
தற்போதைய சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார அவர்களின் ஏற்பாட்டின் படியே, இத்திட்டம் மேற் கொள்ளப்படுகின்றது.
முன்னாள் சபாநாயகர்கள் பாவித்த பேனா, மேல் அங்கிகள், உத்தியோகபூர்வ உடைகள் போன்றன இந்தக் கண்காட்சியில் வைக்கப்படவுள்ளன.
இவைகளோடு குறித்த சபாநாயகர்களின் புகைப்படங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். பாராளுமன்றத்தின் கீழ்த்தளத்திலே அமைக்கப்படும் விசேட கூடத்திலேயே இவை காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

## இளம் பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல்

இளம் பிள்ளைகளை வேலைக்கு அமர்த்துதல் என்பது சட்டப்படி குற்றமாகும். எனினும், சர்வதேச மட்டத்தில் இப்போதும் அநேகமான நாடுகளில் இளம் பராயத்தினர் வீட்டு வேலைகள் உட்படப் பல்வேறு விதமான வேலைகளுக்கு அமர்த்தப்பட்டே வருகின்றனர்.
நிக்கரகுவா நாடும் அதற்கு விதிவிலக்கல்ல. அங்குள்ள தங்கச் சுரங்கங்களில்



இளம் பராயத்தினரே அதிகமாக வேலைக்கு அமர்த்தப்படுகின்றனராம். அதிலும் 5 தொடக்கம் 17 வயதுடையோரே இவ்வாறு அங்கு சுரங்க வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனராம்! இவ்வாறு இவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதனால் பாடசாலைக்கும் இவர்களால் செல்ல முடிவதில்லை. அத்தோடு வேலைக்கேற்ற போதிய சம்பளமும் வழங்கப்படுவதில்லை. இத்தகையதோர் நிலையில் இவர்களின் எதிர்காலமும் பாழடிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது,
இவற்றைத் தடுக்கும் பொருட்டு நிக்கரகுவா அரசாங்கம் பலவிதமான சட்டதிட்டங்களை வகுத்துள்ள போதிலும், அதன் மூலம் எவ்வித பயனும் கிட்டுவதாக இல்லை என்றே கருதப்படுகின்றது.

## கிராமியப் பாடசாலைகளுக்கு உதவும் திட்டங்கள்

கொழும்பு போன்ற பிரதான நகரங்களில் உள்ள பாடசாலைகளில் காணப்படும் வசதிகளைப் போன்று கிராமியப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கை முதலீட்டுச் சபை, தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைந்தே மேற்படி திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
இதன் கீழ், பின் தங்கிய பகுதிகளின் பாடசாலைகளுக்கு நூலக வசதிகள், விஞ்ஞான ஆய்வுகூடம், கணனி மையம், தொழிநுட்ப உபகரணங்கள் என்பவற்றைக் குறித்த தனியார் நிறுவனங்கள் அமைத்துக் கொடுக்கவுள்ளன. இவற்றோடு கட்டிட வசதிகள், மலசலகூடம், தண்ணீர் வசதிகள் ஆகியன தேவைப்படும் பாடசாலைகளுக்கும், அவற்றை வழங்குவதற்கும், சில தனியார் நிறுவனங்கள் முன் வந்துள்ளமையினால், கிராமப் புறப் பாடசாலைகளுக்கு இவை உரிய நன்மைகளை அளிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## அமெரிக்கச் சுகாதார அமைப்பின் ஆர்வம்

அமெரிக்காவில் இளம் பிள்ளைகளுக்குரிய இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு வரும் அமெரிக்காவின் சுகாதார அமைப்பொன்று, இலங்கையிலும் இதே போன்று இருதயக் கோளாறுகளுக்கு ஆளாகியிருக்கும் இளம் பிள்ளைகளுக்கு இருதய சத்திர சிகிச்சைக்குரிய உதவிகளை மேலும் வழங்க விருப்பம் தெரிவித்துள்ளது.
1990 ஆம் ஆண்டிலிருந்து மேற்படி அமைப்பு இலங்கைக்கு இவ்வகை உதவிகளை வழங்கி வருகின்ற நிலையிலும், மேலும் 50 இலட்சம் டொலர் மதிப்புள்ள மருத்துவ உபகரணங்கள் உட்பட இன்னும் மேலதிக உதவிகளையும் வழங்க விருப்பம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளங்கையில் தொலைக்காட்சி




உலக அளவில் இன்று தொழிநுட்பமானது வளர்ச்சி கண்டு வருகின்றது. இதனால் நாளுக்கு நாள் புதுப்புது கண்டுபிடிப்புக்களும் சந்தையில் அறிமுகமாகின்றன. இங்கு படத்தில் நீங்கள் காண்கின்ற தொலைக்காட்சியும் அவ்வாறான ஒரு கண்டுபிடிப்பேயாகும். இது 'டொஷிபா' நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தியுள்ள அளவில் சிறிய கையடக்க தொலைக்காட்சியாகும். 3.5 அங்குலம் அகலத் திரையைக் கொண்டுள்ள இந்தத் தொலைக்காட்சி விரைவில் சந்தையில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாம்.

இதுவொரு விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி வீட்டுக்குள் வருவதெப்படி?

தகவல் தொழில்நுட்ப ஊடகங்களில் தொலைக்காட்சி முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அந்தத் தொலைக்காட்சி ஊடாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட படங்கள் எவ்வாறு உங்கள் வீட்டுக்குள் வருகின்றன என்பதைப் பார்ப்போம்.




தொலைக்காட்சிக் கமரா இயங்க ஆரம்பிக்கின்றது. அப்போது அக்கமராவுக்குள் இருந்து படத்தைப் பதிவு செய்யும் கதிர்கள் பாய்ந்து செல்கின்றன. இவ்வாறு செல்லும் ஒளி கமராவுக்குள் இயங்கும் மைக்ரோ சிப்ஸ் என்ற பாகத்துடன் மோதுகின்றது. அதில் இருந்து 40,000 இலத்திரனியல் கூறுகள் விரிவடைகின்றன. இந்தப் பிரிவு "சார்ஜ் கப்பில்" (Charge Couple) என்றழைக்கப்படும்.


இதன் மூலம் மிகவும் பிரகாசமான குறித்த பொருள் தெளிவாகத் தெரியும் நிலை உருவாக்கப்படுகின்றது. வீடியோ ஒளிநாடா செயல்படுவதும் ஓடியோ ஒலிநாடா செயல்படுகின்ற அதே அமைப்பிலாகும். ஆனாலும் வீடியோ படச்சுருளின் செயல்பாடு சற்று விரிவானதாகும்.

ஒலிநாடாவில் போன்றே ஒளி நாடாவிலும் தகவல் களஞ்சியத்துடன் தொடர்பை ஏற்படுத்துவது "கொம் கோடர்" (Com Corder) என்ற உபகரணமாகும். இக்கருவி அதற்குக் கிடைக்கும் ஒளியை விஞ்ஞான அலைவரிசையாக மாற்றம் பெறச் செய்கின்றது. நிறம், பிரகாசத்திற்கு ஏற்பச் சமிக்ஞையின் தன்மை வேறுபடும். இந்த சமிக்ஞை வீடியோ கருவியில் பதிவாகின்றது. இந்த ஒளி நாடாவை மீண்டும் செயல்படச் செய்யும் போது அதனுள் பதிவாகியுள்ள இலத்திரனியல் சமிக்ஞை தேவைக்கேற்ப விஞ்ஞானச் சமிக்ஞையாக வெளிப்படுகின்றது. அதன் மூலம்தான் எமக்கு உருவங்கள் தென்படுகின்றன.

ஒரு செக்கனுக்குள் ஒன்றுக்கொன்று வேறுபடும் விதமாக 30 விதமான உருவமைப்புத் தென்படும் நிலை காணப்படுவது இதற்கு முக்கிய காரணமாகும். திரைக்குப் பின்னால் உள்ள இலத்திரனியல் கதிர்கள் அங்குமிங்குமாகச் செல்லும். அந்தக் கதிர்கள் வெளியாவது ஒளிப்பதிவு நாடாவில் பதிவாகியுள்ள கூறுகளுக்கேற்பவாகும். அந்தச் செயல்பாடு மூலம் திரையின் மேற்பரப்பில் பொஸ்பரஸ் என்ற இலத்திரன் மூலம் சலனத் துணிக்கை போன்ற வடிவம் வெளிப்படுகின்றது. இவை ஒன்றாகச் சேர்ந்து வெவ்வேறு வர்ணங்கள் உருவாகின்றன. இவ்வாறு திரை மீது படியும் கூறுகள் நிறப் பிரகாசத்தின் அடிப்படையில் செயல்படும்.

இவ்வாறான இலத்திரனியல் அலை பாயும் திரைக்குப் பதிலாக வேறு விதமான செயல்பாட்டைக் கொண்ட தொலைக்காட்சியும் இருக்கின்றது. இவை ஏல்.சீ.டீ. (L.C.D) என்றழைக்கப்படுகின்றது.


தொலைக்காட்சி அலை வரிசைகள் உங்கள் வீட்டுக்குள் வரும் வழிமுறைகள் வேறுபட்டதாக அமைகின்றன. பொதுவாக இச்செயல்பாட்டுக்கு யூ.எச்.எப் (U.H.F) வானொலி அலைவரிசை பயன்படுத்தப்படுகின்றது. இந்த அலைவரிசை செய்மதி ஊடாகச் செல்கின்றது. நாட்டின் பரப்பளவிற்கு ஏற்பச் செய்மதியின் வடிவமும் வேறுபடுகின்றது. அவை வீடுகளில் உள்ள அன்டனா ஊடாகத் தொலைக்காட்சிக்கு வருகின்றன. அன்டனாவில் இருந்து தொலைக்காட்சியில் பொருத்தப்பட்டிருக்கின்ற வயர் இணைப்பு ஊடாகத் தொலைக்காட்சிக்கு விஞ்ஞான சமிக்ஞை கிடைக்கின்றது. அந்தச் சமிக்ஞை மூலம் தான் ஒளிபரப்பு நிலையத்தில் இருந்து வீடியோச் சுருளுக்கு நிகரான உருவம் எம்மால் காணக் கூடியதாகின்றது.




ஜப்பான் நாட்டின் யொக்கோஹாமா நகரை அண்டியுள்ள தக்கைஜிமா எனப்படும் கடல் பகுதியானது நத்தார் பெருநாளையொட்டிப் பெருமளவிலான உல்லாசப் பயணிகள் வருகை தருகின்ற பகுதியாக மாறியுள்ளது. இங்கு வருகின்ற உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் விதமாக சுழியோடி ஒருவர் நத்தார் தாத்தாவைப் போன்று உடை உடுத்திக் கொண்டு கடல் அடியில் நீந்திச் சென்று டொல்பின்களுடன் இருப்பதையே படத்தில் காண்கிறீர்கள்.

# கடலுள் மறைந்த நகர் அத்திலாந்திக் பற்றிய தகவல்

புராணங்களில் விபரிக்கப்பட்டுள்ள அத்திலாந்திக் நகரம், உண்மையில் முற்காலத்தில் இருந்த நகரமென்றும், அதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும், ஐக்கிய அமெரிக்க தொல் பொருளியல் ஆய்வாளர் றொபர்ட் கார் மார்ஸ்ட் தெரிவித்துள்ளார். இந்நகரம் சைப்பிரஸ் மற்றும் சிரியா ஆகிய நாடுகளுக்கிடையில் அமைந்துள்ள மத்திய தரைக்கடல் படுக்கையில் இருந்துள்ளது என்று இவர் தெரிவித்துள்ளார்.



இவரது ஆய்வுகளின் போது 1.5 கி.மீ கடலாழத்தில், சைப்பிரசுக்கு 50 கி.மீ அப்பால், மனிதனால் உருவாக்கப்பட்ட அமைப்புக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என அண்மையில் பத்திரிகையாளர் மாநாடொன்றில் தன் கண்டுபிடிப்புக்களை இவர் அறிவித்துள்ளார்.

இந்த ஆய்வுகளை இவர் 10 ஆண்டுகளாகச் செய்து வருகின்றார். இவரின் ஆய்வுகளுக்குச் செலவாக 250,000 டொலர்கள் தேவையென்றும் இவர் கோரியுள்ளார்

இவரது கண்டு பிடிப்புக்கள் தொடர்பாக இவர் எழுதியுள்ள "டிஸ்கவரி ஆப் அட்லாண்டிஸ்" என்ற நூலில், முன்னர் கடலுக்குள் அமிழ்ந்து போன கண்டத்தின் ஒரு பகுதியாகவே சைப்ரஸ் இருந்துள்ளதென்றும், இது இக்கண்டத்தின் மிக உயர்ந்த மலை உச்சியாக இருந்ததென்றும், இவரது இந்த விபரங்கள் அனைத்தும் பிளேட்டோ தெரிவித்துள்ள, அத்திலாந்திக் நகர் தொடர்பான விபரங்களுடன் ஒத்துப் போகிறதென்றும் கூறியுள்ளார். பிளேட்டோ புராதன கிரேக்கத்தின் தத்துவவியலாளராகும். கி.மு.2000 ஆம் ஆண்டில் வாழ்ந்திருந்த இவர் தனது நூல்களான 'திமாயூஸ்', 'கிரிடியாஸ்' ஆகியவற்றில், கி.மு 9000 ஆண்டுகளில் இருந்ததாகக் கருதப்படும் அத்திலாந்திக் நகர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஆரெஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












"இரண்டாம் உலக யுத்தமானது நாடுகள் பலவற்றிற்குப் பெரும் அழிவினை ஏற்படுத்திய ஒரு யுத்தமாகும். இந்த யுத்தத்தின் போது, ஜப்பான் தரைமட்டமாகிய சோகமான நிகழ்வு எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத ஒரு நிகழ்வாகும். இதன் மூலம் 'டொயோட்டா' கார் உற்பத்தித் தொழிற்சாலை 'நிஸான்' நிறுவனம், 'சுபாரு' நிறுவனம் ஆகியன முழுமையாக நாசமாக்கப்பட்டன. இவ்வாறே மேலும் பல கார் உற்பத்தி நிறுவனங்களும் இரண்டாம் உலக யுத்தத்தின் போது அழிவடைந்தன என 'டெட்ஸன்' அண்ணன் மிகக் கவலையுடன் கூறியது.

"தம்பி... அதென்றால் உண்மைதான்." ஒத்துக் கொண்டது டெட்ஸன் அண்ணா.

"ஜப்பான் முழுமையாக அழிந்து விட்டது என்றுதான் அந்நாட்களில் பேசப்பட்டது. ஆனால் நாங்கள் எல்லாவற்றையும் வெற்றி கொண்டு மீண்டும் முன்னணிக்கு வந்தோம் தானே டெட்ஸன் அண்ணா....?" என்றது பென்ஸ்.

"ஆமாம்.... அது சாதாரண மீட்சி அல்ல...! இரண்டாவது உலக யுத்தத்தின் பின்னர் கார் உற்பத்தியாளர்கள் பலர் ஜப்பானில் கார் உற்பத்தி செய்ய மிகவும் பயந்தனர். அமெரிக்காவிற்கு எதிராக வாகனங்களைத் தயாரித்தமையினாலேயே அவர்களுக்கு இந்த அச்சம் நிலவியது.
ஆயினும் தொடர்ந்து வாகனங்களைத் தயாரிக்கத் தொடங்கினர். இதுதான் ஜப்பானுக்கு மிகவும் கஷ்ட காலமாகவும் இருந்தது. 1949 ஆம் ஆண்டளவில், வாகனத் தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்த உற்பத்தியாளர்கள், தமது ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதில் ஆர்வமாய் இருந்தனர். இதனை அநேகமானோர் எதிர்த்தனர். இதனால் ஜப்பானில் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடைபெற்றன. இந்தப் போராட்டத்தின் காரணமாக 'மிட்சுபிஷி' நிறுவனம் மூன்றாகப் பிளவுபட்டது. ஒரு வகையில் இதுவும் ஒரு நன்மையாகவே அமைந்தது." என்று கூறியது டெட்ஸன்.

"அண்ணா! 1950 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட நல்ல ரக, தரமான கார்கள் எவை?" எனக் கொரல்லாத் தம்பி கேட்டது.

"அந்தக் காலகட்டத்தின் போது பலவிதமான கார்கள் தயாராகின. இதில் ஒன்றுதான் "டெட்ஸன் ரோட்ஸ்டர் டீசீ-3" என்ற வாகனமாகும். இது ஒரு ஸ்போர்ட்ஸ் ரகக் காராகும். இதன் பின்னர் இங்கிலாந்தின் "ஒஸ்டின்" நிறுவனம் ஜப்பானில் கார் தயாரிப்பில் ஈடுபடத் தொடங்கியது. இவ்வாறு தயாரிக்கப்பட்ட வாகனங்கள் நேரடியாக இங்கிலாந்திற்குக் கொண்டு செல்லப்பட்டு 'ஒஸ்டின் ஏ40" என்ற பெயரில் அங்கு அறிமுகப்படுத்தப்பட்டது."

"அதாவது ஒஸ்டின் அவர்களுடன், நிஸான் நிறுவனம் கொண்டிருந்த பிரச்சினைகள் தீர்ந்தன என்றுதானே அர்த்தம்....?"

"ஆமாம்.... அத்தோடு அப்பிரச்சினைகள் தீர்ந்தன. இதனால் "நிஸான்" வாகனம் இங்கிலாந்தில் பெருமளவில் வரவேற்பைப் பெற்றது. இதே வேளை, இஜி டொயோட்டா அவர்கள் சகல உதிரிப்பாகங்களாலும் தயாரிக்கப்பட்டதாகக் கொண்ட வாகனமொன்றைத் தயாரிப்பதில் ஆர்வம் காட்டி வந்தார்.
இதனால் அவர் 1950 ஆம் ஆண்டில் அமெரிக்காவிற்குச் சென்று, அங்கு வாகனங்கள் தயாரிக்கும் விதத்தைப் பார்வையிட்டார். இவ்வாறு அமெரிக்காவில் "ஃபோர்ட்" நிறுவனத்தில் நடக்கும் வேலைகளைப் பார்வையிட்ட 'டொயோட்டா" அவர்கள், ஜப்பானிற்குத் திரும்பியவுடன், தனது நிறுவன ஊழியர்களைச் சந்தித்து, ஃபோர்ட் நிறுவனத்தினால் முடிந்ததை நம்மாலும் செய்து காட்ட முடியும் எனக்கூறித் தமது ஊழியர்களை உற்சாகமூட்டினார்"

"டெட்ஸன் அண்ணா! இன்னும் நல்லதொரு சம்பவம் அப்போது நடந்ததுதானே.....?" எனக் கொரல்லாத் தம்பி குறுக்கிட்டது.
"ஆம்.... இங்கிலாந்திலுள்ள வேலைகளையே ஜப்பானிலும் முன்னெடுக்க விரும்பிய டொயோட்டா அவர்கள் தனது ஊழியர்கள் அனைவரையுமே சகல வேலைகளிலும் திறமை மிக்கவர்களாகப் பயிற்சி பெறச் செய்ததோடு, வாகனத் தயாரிப்பின் போது ஏதேனும் தவறுகள் நேர்ந்து விட்டால் அவ்விடத்திலேயே, அப்போதே ஊழியர்களே அத்தவறைத் திருத்திக் கொள்ளும் விதமாக, அவர்களைச் சிறப்புப் பயிற்சிப் பெறச் செய்து, அதற்கான அங்கீகாரத்தையும் வழங்கினார். ஏனென்றால் அமெரிக்காவிலோ, ஐரோப்பாவிலோ இந்த நடைமுறை இருக்கவில்லை. அதாவது அந்தக் காலத்தில் காரைத் தயாரித்து அதன் பின்னர் அதிலுள்ள பிழை, திருத்தங்களைச் செய்வதே அக்காலத்தில் அந்நாடுகளில் வழக்கமாக இருந்து வந்தது. ஆனாலும் "டொயோட்டா" அவர்களின் உடனுக்குடன் தவறைத் திருத்திக் கொள்ளும் முறையானது, வெற்றிகரமான ஒரு செயலாகவே அமைந்தது. இதன் காரணமாக 1955 ஜனவரி 01 ஆம் திகதியன்று "டொயோட்டா கிறவுன்" என்ற வாகனத்தை டொயோட்டா அவர்கள் சந்தையில் அறிமுகம் செய்தார். இந்த வாகனமானது ஒரு குடும்பம் அப்படியே பயணம் செல்லக் கூடிய விதத்தில் அமைக்கப்பட்டிருந்தது" என டெட்ஸன் கூறியது.

"வெற்றி.... வெற்றி....." எனக் கொரல்லாத் தம்பி சத்தமிட்டது.

"இந்த வாகனம் ஜப்பானில் மிகவும் பிரபல்யத்தைப் பெற்றது. ஆயினும், இந்த வாகனத்தை 1957 ஆம் ஆண்டின் போது அமெரிக்காவில் அறிமுகம் செய்து வைத்த போதிலும் அது அதிகம் விற்கப்படவில்லை. ஆனாலும் டொயோட்டா அவர்கள் சோர்வடையவில்லை. இதன் பின்னர் 1960 ஆம் ஆண்டில் டொயோட்டா அவர்கள் "டொயோட்டா கொரோனா" வாகனத்தை அறிமுகப்படுத்தினார். இந்த வாகனத்திற்கு அமெரிக்காவில் பெரும் வரவேற்புக் கிடைத்தது" என டெட்ஸன் கூறியதும்,

"அந்தக் காலத்தில் 'டொயோட்டா' வாகனம் மட்டும்தான் அமெரிக்காவில் பிரபல்யம் பெற்றிருந்ததா?" எனப் பென்ஸ் கேட்டது.

"இல்லையில்லை.... நிசான், டெட்ஸன் வாகனங்களும் இந்தக் காலத்தில் பிரபல்யம் பெற்றிருந்தன. டெட்ஸன் 110 காரும், டெட்ஸன் 120 டிரக்கும் அப்போது அறிமுகமாகியிருந்தன. 1960 ஆம் ஆண்டை அடைந்தபோது ஆண்டிற்கு 66,000 வாகனங்களைத் தயாரிக்கும் அளவிற்கு அந்த நாட்களில் வாகன உற்பத்தி மிக வேகமாக வளர்ச்சி கண்டிருந்தது"

"அண்ணா டெட்ஸன் வாகனங்கள் அமெரிக்காவிற்கு அனுப்பி வைக்கப்படவில்லையா?"

"ஏன் இல்லை... 1955 ஆம் ஆண்டில் நடைபெற்ற லொஸ் ஏஞ்சல்ஸ் வாகனக் கண்காட்சியில்தான் முதல் தடவையாக 'டெட்ஸன்' வாகனங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இதன் பின்னர், 1959 ஆம் ஆண்டில் 'பீ எல் 310 ப்ளூபேர்ட்' உட்படப் பலவகையான வாகனங்கள் அறிமுகமாகின. இவற்றிற்கும் அமெரிக்காவின் வரவேற்பு கிட்டியது.

"மிட்சுபிஷி நிறுவனம் மூன்றாக பிளவுபட்டது," என்று ஆரம்பத்தில் கூறினேன் அல்லவா? 1951 ஆம் ஆண்டில் "சென்ட்ரல் ஜப்பான் ஹெவி இண்டஸ்ட்ரீஸ்" என்ற மிட்சுபிஷி நிறுவனம் அமெரிக்காவின் 'வில்லீஸ்' என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டது. இந்த ஒப்பந்தத்தின் காரணமாகவே, ஜப்பானில் சிறந்த ஜீப்களைத் தயாரிப்பதற்கு மிட்சுபிஷி நிறுவனத்தினால் முடிந்தது."

"அப்படியானால்.. அண்ணா, அந்தக் காலத்தில் மிட்சுபிஷி கார் அறிமுகமாகியிருக்கவில்லையா?" எனக் கொரல்லாத் தம்பி கேட்டதற்கு,
"ஏன் இல்லை...? 1960 ஆம் ஆண்டில் மிட்சுபிஷி நிறுவனம் "மிட்சுபிஷி 500" என்ற காரை அறிமுகம் செய்தது. தொடர்ந்து 1961 ஆம் ஆண்டில் 'மிட்சுபிஷி 360' என்ற வாகனம் அறிமுகமாகியது. இதுதான் 'மினிக்கா' என்றழைக்கப்படும் காரின் ஆரம்ப நிலை வாகனம் எனக் கூறப்படுகின்றது. இப்போதும் இந்த ரக வாகனங்கள் தயாரிக்கப்பட்டே வருகின்றன. இதன் பின்னர்தான் 'மிட்சுபிஷி' நிறுவனத்தைப் பெரிதும் பிரபல்யப்படுத்திய 'கோல்ட்' என்ற வாகனம் அறிமுகமாகியது. முதலில் 'கோல்ட் 600' என்ற வாகனமே அறிமுகமாகியது."

"அண்ணா அப்படியென்றால் ஜப்பானில் வேறு வாகனத் தயாரிப்பாளர்கள் இருக்க வில்லையா....?"

(உரையாடல் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களின் மனோ...
# வெளிப்படுத்தும் ஒ...

**அவதார புருஷர்களிடமும், கடவுளர்களிடமும் உள்ளதாகக் கருதப்படும் இத்தகைய ஒளிவட்டம் சாதாரண மனிதர்களிலும் காணப்படுவதாக அறியப்பட்டுள்ளது.**

### மனோ ஆற்றலைப் புகைப்படக் கருவியால் படம் பிடிக்கலாம்!

பேரண்டத்திலும், ஏனைய கிரகங்களினும், புவிக்கிரகத்திலும் நிகழ்கின்ற நிகழ்வுகளுக்கெல்லாம் ஏதோ ஒரு விதத்தில் விஞ்ஞானக் காரணிகள் உள்ளன. மழை, வெயில், காற்று, பூமியதிர்ச்சி, எரிமலை வெடித்தல் முதலானவை ஏன் நிகழ்கின்றன? என்பதற்குக் காரணங்கள் கட்டாயம் உண்டு. எனினும், இன்னும் பல இன்னோரன்ன இத்தகைய நிகழ்வுகளுக்கு விஞ்ஞானத்தால் காரணம் கண்டு பிடிக்க முடியாதுள்ளது. வேறு விதத்தில் சொன்னால் அந்த அளவுக்கு விஞ்ஞானம் இன்னமும் வளர்ச்சியடையவில்லை எனலாம். ஆனாலும் அத்தகைய விடயங்களை அறிவுக்கப்பாற்பட்டது என ஒதுக்கி விட முடியாதுள்ளது. சில வேளை இவை உங்களது அறிவுப் பசியைத் தூண்டுவனவாக இருக்கும்.

இன்று நாம் உங்களுக்குச் சொல்லப்போகும் இத்தகைய விடயங்கள் தொடர்பில் ஏற்கனவே பலர் பல ஆய்வுகளைச் செய்துள்ளனர். அவற்றுக்கான ஆதாரங்களையும் தேடியுள்ளனர். ஆனால் அவர்கள் சொல்ல முயல்பவையை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாதிருப்பினும் மேலும் ஆய்வுகளுக்கு அவை வழிவகுக்கும்.

உதாரணமாகக் கடவுளர்களின் அல்லது தெய்வங்களின் படங்களை அவதானித்தால் அவர்களின் தலையைச் சுற்றி ஒரு மஞ்சள் நிற ஜோதி வட்டமாக வரையப்பட்டிருக்கும். அதே போல் அவதார புருஷர்களான புத்தர் பெருமான், யேசுநாதர், மகான்களான மகாத்மா காந்தி, விவேகானந்தர் மற்றும் மாமனிதர்கள் என்று போற்றத் தக்கவர்களின் படங்களிலும் இத்தகைய ஒளிவட்டம் காணப்படுகின்றது. இவர்கள் மிகுந்த மனோவலிமையும், ஆத்ம சக்தியும் மிக்கவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்ட ஓவியங்களிலும், இத்தகைய ஜோதியுடன் கூடிய ஒளி வட்டம் வரையப்பட்டுள்ளது. இத்தகையவர்களின் உயர் தன்மையையும், மேன்மையையும், கௌரவத்தையும் குறிக்கும் அடையாளமாகவே இது உள்ளதென ஆரம்பத்தில் விஞ்ஞான ஆய்வாளர்கள் இதனைக் கருதினர். எனினும், புராணங்களிலும், இதிகாசங்களிலும் கதைகளிலும் வரும் இத்தகைய மகா புருஷர்களைச் சுற்றித் தேஜஸ் மிக்க ஜோதி பரிணமித்ததாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் விஞ்ஞான ரீதியில் சிந்திப்பவர்கள் இதனை ஒப்புக் கொள்ளவில்லை. பின்னர் பல ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வின் படி இத்தகைய ஒளிவட்டம் மகா புருஷர்களில் மாத்திரமன்றிச் சாதாரண மனிதர்களிலும் அவரவர் மனோசக்தி, சிந்தனை ஆற்றல், உயர் எண்ணங்கள் என்பவற்றின் சூழல் அடிப்படையில் விரிந்தும், சுருங்கியும் காணப்படுவதாக நம்பப்படுகின்றது. மனோசக்தியும், உயர் சிந்தனையும் ஆழமாக வெளிப்படுத்தப்படும் போது இத்தகைய ஒளிவட்டமும் அடர்த்தியும், அகலமும் கொண்டு விரிவடைவதாக அவர்கள் கூறுகின்றனர். ஆதலால் வெறுமனே சமய ரீதியிலான கருத்து இப்போது விஞ்ஞான பூர்வச் சிந்தனையாக வளர்ச்சியடைந்து வருகின்றது.


### இத்தகைய சிந்தனையின் வளர்ச்சி

தமிழில் இத்தகைய பிரகாசத்தை 'ஒளிவட்டம்' அல்லது 'ஜோதி' என்று குறிப்பிடலாம். ஆங்கிலத்தில் இதனை "Aura" (ஓரா) எனக் குறிப்பிடுகின்றனர். ஆரம்பத்தில் இது தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டவர்கள், ஒரு புகைப்படக் கருவியைப் பயன்படுத்தினர். 'கிர்லியன் கமரா' என்று அழைக்கப்பட்ட இப்புகைப்படக் கருவி விசேடத்துவம் மிக்கது. விஞ்ஞானிகள் இக்கருவியைப் பயன்படுத்தி மனிதர்களைச் சுற்றி ஏற்படுகின்ற இவ் ஒளிவட்டத்தைப் புகைப்படம் எடுத்தனர். அவ்வித ஒரு சந்தர்ப்பத்தில் இருந்த மனிதன் ஒருவனின் ஆத்மாவைப் படம் பிடிக்கக் கூடியதாக இருந்ததென்று இவர்கள் கூறுகின்றனர். இவ்விதம் மனிதர்களைச் சுற்றி வர்ண ஒளிவட்டம் காணப்படுகின்றது என்பதை 1911 ஆம் ஆண்டு நிரூபிக்க முயன்றவர் பிரித்தானியாவைச் சேர்ந்த வைத்தியரொருவராகும். இவரே ஆரம்பத்தில் ஒவ்வொரு மனிதனைச் சுற்றியும் வேறு, வேறுபட்ட அளவுகளில் ஒளிவட்டம் காணப்படுகின்றது என்ற கருத்தை முன்வைத்தார். எனினும், இக்கருத்தை 1930களின் பின்னரே விஞ்ஞான பூர்வமானது என ஏற்றுக் கொண்டனர். அமெரிக்காவைச் சேர்ந்த மற்றுமொரு வைத்தியர் மனித உடம்பைச் சுற்றிக் காந்த அலைகள் செயற்படுவதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து, இக்கருத்துக்கள் பற்றிய ஆய்வுகளும், பரிசோதனைகளும் அதிகரிக்கவாரம்பித்தன.

அதனைத் தொடர்ந்து 'ஒளி வட்டக் கோட்பாடு' காந்த அலைச் செயற்பாடு என்பவற்றை இணைத்து மனிதனைச் சுற்றி ஒரு மின் தொழிற்பாடு இருக்கின்றது என்ற கருத்து உருவாக்கப்பட்டது.

எனினும் 1960 ஆம் ஆண்டில் ரஷ்ய விஞ்ஞானி ஒருவரின் முயற்சியாலேயே ஒளிவட்டத்தைப் புகைப்படம் எடுக்கக் கூடியதாக இருந்தது. 1930 ஆம் ஆண்டு சிமியோன் கிரிலியன், வெலன்ரினா கிரிலியன் ஆகியோர் கண்டு பிடித்த இந்தக் கிரிலியன் கமராவின் உதவி கொண்டு படம் பிடிக்கும் கைங்கரியத்தைச் செய்தவர் 1960 ஆம் ஆண்டு மற்றுமொரு ரஷ்ய விஞ்ஞானியாகும். இந்தக் கமராவினதும், புகைப்படங்களதும் வருகையால் மனித உடலில் இருந்து வெளிப்படுத்தப்படும் ஒளிப்பிரகாசம், காந்த மற்றும் மின் கிரணங்கள் (ஏற்கனவே மனித உடம்பில் குறிப்பிடத்தக்க மின்சாரம் உள்ளது என நிரூபிக்கப்பட்டுள்ளது) தொடர்பில் பரவலாகப் பேசவாரம்பிக்கப்பட்டது. மனித உடலைச் சூழவுள்ள மேற்படி ஒளிவட்டம், அதன் பிரகாசமான வர்ணங்கள், காந்த மற்றும் மின் அலைகள் தொடர்பில் அவை எதற்காகத் தோன்றுகின்றன வெனப் பல அர்த்தங்கள் கற்பிக்கப்பட்டன என்ற போதும் அவை மனிதனின் மனநிலையின் தழம்பல்களையும், மனோ வலிமையையும், உயர் எண்ணங்களையும் பிரதிபலிக்கின்றனவென்று ஜேர்மன் ஆய்வாளரான ருடோல்ப் ஸ்டோனர் என்பவரால் நிரூபிக்கப்பட்டது.















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..ா சக்தியை ..ளிவட்டம்









### அடர்த்தியான ஜோதி

செயலூக்கத்தினை வெளிப்படுத்தல்

### இளஞ் சிவப்பு, இளம் ஊதா

குழந்தைகள், நாடு, இனம் முதலானவை மீது அர்ப்பணிப்புச் சிந்தனையை வெளிப்படுத்துவது. உயர் மனோபாவத்தைக் குறிப்பிடுவதாக மேற்படி வர்ணங்கள் உள்ளன.

மேற்படி ஒளிவட்டம் மனிதர்களில் மட்டுமன்றி, மிருகங்கள், பறவைகள், தாவரங்களிலும் வெளிப்படுத்தப்படுவதாகவும் அறியப்பட்டுள்ளது. மிருகங்கள் அதிகமாக்க் கடுமையான ஊதா நிறத்தையே வெளிப்படுத்துகின்றன.

### ஆத்ம (மனோ) பலம்

மறுபுறத்தில் மனிதனின் ஆத்ம சக்தியும், மனோ பலமும் அதிகரிக்க, அதிகரிக்க மூளையின் அமைப்பு முற்றிலும் மாறி விடுவதாகவும், இத்தகைய தன்மை சீனா, தாய்லாந்து, திபெத் முதலான நாடுகளில் தியானத்தில் ஈடுபடும் பௌத்தர்கள் மத்தியில் ஆய்வு செய்த போது தெரியவந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கபில, சிவப்பு, மஞ்சள் நிறங்கள்

மனித உடலைச் சுற்றிச் சிவப்பு மற்றும் கபில நிறம் அதிகமாகவும், சிறிது மஞ்சளும் கலந்திருந்தால் அது அதிக கோபத்தையும், ருத்திர..யும் வெளிப்படுத்தும் போதாகும். பசி, தாக.., அச்சம், பழிவாங்கும் எண்ணம் ஆகிய உணர்ச்சி வெளிப்பாடுகளின் போது இப்படிக் காணப்படும். இவை மனக்கிளர்ச்சிகளைக் குறிக்கும்.

### சிவப்பு

இவ்வர்ணம் வன்முறையைப் பிரதிபலிக்கின்றது.

### கடும் பச்சை

மனவேதனை, தோல்வி, மனம் உடைந்திருத்தலின் போது.

### சிவப்புடன் கலந்த மஞ்சள், பச்சை

மனச் சந்தோஷமும், அதிக சந்தோஷமும் ஒரு வித மனக்கிளர்ச்சி என்றே கருதப்படுகின்றது.

### வழக்கமான பச்சை

ஆழ்ந்த சிந்தனையைக் குறிப்பிடுகின்றது.

### நீலம்

பக்தி உணர்ச்சியைக் குறிப்பிடுகின்றது.

### உயர் சிந்தனைகள்

நாம் இதுவரை உயர் எண்ணங்கள் சிந்தனைகள் கொண்டவர்கள் தொடர்பில், தெரிந்து வைத்திருக்கின்றோம். ஆனால் உயர்ந்த உடற் தோற்றத்தைப் பற்றி சிந்தித்துள்ளோமா? உதாரணமாகத் தோற்றத்தில் அழகாக நடை, உடை, பாவனைகளைக் கொண்டிருப்பதால் எல்லோராலும், எல்லோரும் விரும்பப்படுகின்றனரா? சில வேளை அத்தகையவர்கள் எமக்கு எந்த விதத் தொல்லையும் தராவிட்டாலும் சில பேரைக் கண்டவுடன் நமக்கு வெறுப்பு ஏற்படும்.

நாம் தெரியாத ஊருக்குச் சென்றால் பாதையில் செல்லும் எல்லோரிடமும் வழி கேட்கிறோமா? ஏன் சிலரைத் தெரிவு செய்து அவர்களிடம் பேசுகிறோம். இதற்கெல்லாம் காரணமுண்டு என மேற்படி ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சிலரைப் பார்த்தவுடன் அவர்கள் மீது பிரியமும், சிலபேரைப் பார்த்தவுடன் அவர்கள் மீது வெறுப்பும் ஏற்படுவதாக இவர்கள் கூறுகின்றனர். ஆதலால் மனிதர்களின் மன வலிமைகளும், எண்ணங்களும் உடலிலும் பிரதிபலிப்பதாகக் கருதப்படுகின்றது.

இத்தன்மை மிருகங்களிலும் காணப்படுகின்றன. நாய்கள் சிலரைக் கண்டால் வாலாட்டும், சிலரைக் கண்டால் கடிக்கும். பாம்புகளும் அப்படித்தான். இம்மிருகங்கள் மனிதனில் ஏற்படும் ஒளிவட்டத்தையும், காந்த மின் அலைகளையும் உணருவதாகக் கருதப்படுகின்றது. அதற்கேற்பவே அவற்றின் நடத்தைகள் அமைகின்றன. ஆதலால் அவற்றுக்கு ஆபத்து விளைவிப்பவர்கள், மாமிசம் உண்பவர்களை அவை விரும்புவதில்லை எனப்படுகின்றது. நாம் உண்ணும் உணவு வகைகளும் ஒளி வட்டங்களைப் பாதிக்கின்றன.

ஆதலால் நாம் எப்போதும் உயர் சிந்தனைகளையும், எண்ணங்களையும் மனதிற் கொண்டிருப்பதன் மூலம் பல்வேறு சாதகமான சமூகச் சூழலை உருவாக்கிக் கொள்வதுடன் பலராலும் விரும்பப்படுபவர்களாகவும் இருக்க முடியும் என்பது ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

### "ஒளிவட்டம்" தொடர்பான விஞ்ஞானக் கருத்து வெளிப்பாடுகள்.

* மனித உடம்பு, உலோகங்கள், ஏனைய திண்மங்களில் இருந்து ஒளிக்கிரணம், காந்த அலைச் செயற்பாடு, கதிரியக்கம் என்பன செயற்படுகின்றன என நீண்ட கால நம்பிக்கை இருந்து வருகின்றது.
* இந்தியாவின் பழைய (கி.மு.5000) பிரபந்தங்களான வேத, உபநிடதங்களில் இவை பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. யோகிகளும், முனிவர்களும், சித்தர்களும் யோகக் கலைமூலம் இதனை வளர்த்துக் கொண்டனர்.
* சீனாவில் 'கீ' மற்றும் 'யின்' என்ற வார்த்தைகளாலும், 'யென்' என்ற சொல்லாலும் அழைக்கப்பட்டது. இச் சக்திகளைச் சம நிலையில் வைத்திருக்காமல் விட்டால் நோய் ஏற்படும் என அவர்கள் நம்பினர். அக்கொள்கையை அடிப்படையாக வைத்தே (Acue Puncture) அக்கியூ பங்சர் மருத்துவ முறை சீனாவில் ஏற்பட்டது.

* கி.மு 500 ஆம் ஆண்டில் கிறீசின் பைதகரஸ் இதனை Vital Energy என்று அறிமுகப்படுத்தினார். இவர் உடல் ஒளிவட்டக் கோட்பாட்டை ஒளி உமிழும் உடல் (Luminus Body) என்று அழைத்தார்.
* கி.மு 1500 இல் வளர்ந்த ஐரோப்பிய விஞ்ஞானி பெரசெல்ஸ் இதனை Vital Force என்று குறிப்பிட்டார். வேறு விதத்தில் 'இலிப்ஸடன்' என்றும் அழைக்கப்பட்டது.
* பின்னர் கி.மு 1600 இல் வில்ஹெல்ம் வொன் லீப்னிட்ஸ் என்பவரால் 'மொனாட்ஸ்' (Monads) என்றும் 1700 இல் மெஸ்மரி மனோவசியக் கலையை அறிமுகப்படுத்திய மெஸ்மர் இதனை Magnetic Fluid என்றும் இனம் கண்டார். கி.மு 1800 இல் வில்ஹெல்ம் லொன் ரிவென்பச் இதனை ஓடிக் போஸ் Odic Force என்று கூறினார்.

### 20 ஆம் நூற்றாண்டில்........

* 1911 ஆம் ஆண்டு மருத்துவரான வோல்டர் கில்னர் என்பவர் மனித உடம்பு வெளிப்படுத்தும் சக்தி பற்றி ஆராய்ந்து ஒளிவட்டம் (Oura) என்ற கோட்பாட்டை முன் வைத்தார்
* 1940 ஆம் ஆண்டு மருத்துவரான ஜோர்ஜ் டி லாவார் என்பவர் உயிர்க் கலங்கள் வாயிலாக வெளிப்படுத்தப்படும் சக்தியை இமானேசன் Emanation என்று இனங்கண்டுள்ளார்.
* 1930-1950 டி ஹாலோப் என்பவரும், எப்.எஸ்.டி.நொத்ருப் என்பவரும் இதனை Life Field என்றனர். அதனையே 1950 இல் டி.எல்.ஜே.வேட்ஸ் என்பவர் 1 Thought Field என்றார்.
1970-1980 இல் ரொபர் பேக்கர் என்பவர் எலக்ட்ரோமெக்னடிக் (மின்காந்த செயற்பாடு) என்று அழைத்தார்.
* 1970-1990 காலத்தில் விக்டர் இயூனிசின் என்பவர் பயோபிளாஸ்மா (Bio-Plasma) என்றும், வெலிரிக் ஹண்ட் என்பவர் பயோபீல்ட் Bio-Field என்றும் இதனை இனம் கண்டனர்.







இரா. சடகோபன்
மூலக்கருத்து: காமினி ஹப்பு ஆராச்சி,
மனவள ஆலோசகர், விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியற் கலசம்

பருக்கை : 17 அநு.வை. நாகராஜன்

**அன்புச் செல்வங்களே!**

இங்கு, மாணவர் அறிவியல் தகவல்களைத் தாமே கேள்வி கேட்டு அவற்றுக்கான பதில்களை (விடைகளை) உரையாடி ஆசிரியரின் கூடிய விபரங்களுடன் விடயப் பொருளைத் தெரிந்து தெளிந்து கொள்கிறார்கள். இது ஒரு நல்ல முறை. மாணவர்கள் வெறுமனே, கிளிப் பிள்ளை போல் சொன்னதைச் சொல்லாமல் தேடல்களைச் செய்து முடிவுகளைக் காண வேண்டும். இதுவே கல்வியின் நோக்கு. அந்த வகையில் இங்கு மாணவர்கள் கேள்வி கேட்டுப் பதில் கூறுவது போல் உரையாடுகிறார்கள். ஆசிரியர் அங்கிருந்து உதவுகிறார். அவர்கள் உரையாடுவதை நாமும் கேட்போமா? இ·து எமது கலசத்தின் 17 வது பருக்கை. வாசியுங்கள், சுவையுங்கள், மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். மீண்டும் சந்திப்போம்.
வணக்கம்.

அநு.வை.நாகராஜன்.

## டெலக்ஸ்

மேகலா : இதோ, ஒரு கேள்விச் சுருளை எடுத்து விட்டேன்.

ஆசிரியர் : எங்கே அதை வாசியுங்கள்!

மேகலா : "டெலக்ஸ்" எப்படி வேலை செய்கிறது?

ஆசிரியர் : நல்ல கேள்வி. எங்கே மணிமாறா, நீங்கள் இதற்குப் பதில் கூறுங்கள் பார்ப்போம்.

மணிமாறன் : அது ஒரு தந்தி போன்ற ஒரு தொலைப்பன்னி. அவ்வளவுதான் சேர் எனக்குத் தெரியும். நீங்கள் தான் விளக்கம் தர வேண்டும்.

ஆசிரியர் : சரி... நானே விளக்கம் கூறுகிறேன்! 'டெலக்ஸ்' என்பது, டெலிபிரிண்டர் எனும் தொலை அச்சுப் பொறி மூலம் செய்திப் பரிவர்த்தனை செய்யப்படும் ஒரு புதிய முறையான சாதனமாகும். டெலக்ஸ்ஸில் ஒவ்வொரு எழுத்தும் ஓர் இரகசியக் குறிப்பொலியாக இருக்கிறது. இதைத்தான், 'படாட் கோடு' என்று கூறுவார்கள். சாதாரண தந்திப் பரிவர்த்தனையில் "சட்டுச்சட சட்டுச்சட" என்று ஒலிக் குறியீடு இருப்பது போல் இதிலும் ஒவ்வொரு எழுத்துக்கும் ஐந்து (5) சங்கேத அதாவது இரகசிய ஒலிக் குறிகள் இருக்கும். இந்த ஒலியை வானொலி அலை மூலம் நிமிடத்துக்கு நூறு (100) வார்த்தைகள் என்ற வேகத்தில் அனுப்ப முடியும். ஒவ்வொரு எழுத்தை அனுப்பும் போதும் ஓர் ஆரம்ப சங்கேதம் வரும். அதே போல் எழுத்து முடிந்ததும் ஒரு சங்கேதக் குறியீடு இருக்கும். இதனை "ஸ்டாா்ட்" (Start), "ஸ்டொப்" (Stop), "சிஸ்ரம்" (System) என்று கூறுவர்.

## புதன் கோள்

ஆசிரியர் : சரி...... இனி அடுத்த கேள்விச் சுருளை எடுங்கள், மணிமாறா!

மணிமாறன் : இதோ, ஒரு கேள்விச் சுருளை எடுத்து விட்டேன் சேர்!

ஆசிரியர் : சுருளில் உள்ள கேள்வியை வாசியுங்கள், மணிமாறா!

மணிமாறன் : சூரியனுக்கு மிக அருகில் உள்ளது 'மேர்க்குரி' என்ற புதன் கோள் ஆகும். அது ஒரு வெப்பக் கோள். ஆனால், 'வீனஸ்' என்ற சுக்கிரன் கிரகத்தில் தான் வெப்பம் அதிகம். அது எப்படி, புதனிலும் அதிக வெப்பம் உள்ளதாம். அது ஏன்? என்பதுதான் எனக்கு விளங்கவில்லை சேர்.

ஆசிரியர் : மேகலா, இதற்கு உங்களால் பதில் கூற முடியுமா? என்று பாருங்கள்!

மேகலா : எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன், சேர்.

புதன் கிரகம், சூரியனுக்கு மிகவும் அருகில் இருக்கிறது. அ·து ஏனைய கோள்களிலும் மிக மிகச் சிறியது. அதற்கு வாயு மண்டலம் என்று ஒன்றும் இல்லை. பொதுவாக, ஒரு கோளின் வெப்பம், அது சூரியனில் இருந்து பெறும் ஒளியையும், அந்த ஒளியை எவ்வாறு தூரம் பிரதிபலிக்காமல் தனக்குள்ளே உள் வாங்குகிறது என்பதையும் பொறுத்து இருக்கிறது. அந்த வகையில், புதனிலும் சுக்கிரனில் இருக்கும் இந்த நிலை மிகவும் வித்தியாசமாக அதன் வெப்பம் உடையதாக இருக்கும்.

மணிமாறன் : இதற்குக் காரணம் என்ன சேர்?

ஆசிரியர் : இதற்கும்..... மேகலா, நீங்களே பதில் கூறுங்கள், பார்ப்போம்.




மேகலா : நான் நினைக்கிறேன்... சுக்கிரன் கிரகத்தின் வாயு மண்டலந்தான் காரணம் என்று! இந்தக் கிரகத்தைச் சுற்றிக் காபனீரொட்சைட் வாயு இருக்கிறது. அதனால் இங்கு, காற்றழுத்தம் அதிகம்.

ஆசிரியர் : பூமியைப் போல் என்று சொல்லுகிறீர்கள்! அப்படித்தானே மேகலா?

மேகலா : அப்படித்தான் சேர். சுக்கிரனில் காற்றழுத்தம் பூமியைப் போல் 90 மடங்கு இருக்கிறது. இந்தக் காபனீரொட்சைட் வெப்பத்தை ஒரு போர்வை போல் காக்க வல்லது.

> **வல்லமையில் ஆணும், பெண்ணும் ஒன்றுதான். இதைப் போலவே, பெண்ணின் மூளையின் நிறையும் இருக்கிறது. மூளையின் நிறையில் வித்தியாசங்கள் இருந்தாலும் அறிவுத் திறனில் எவ்வித வேறுபாடும் இல்லை.**

அதனால் தான், சுக்கிரனில் வெப்பம் அதிகம். அது 475 பாகை வரை இருக்குமாம்.

மணிமாறன் : அப்படி என்றால், அக்கினி பகவானின் ஆட்சிதான் அங்கு போலும்!

## செவ்வணுக் கலன்கள்

ஆசிரியர் : நன்றாய்ச் சொன்னீர் மணிமாறா! இனி மணிமாறா, உங்கள் முறை.. கலசத்திலிருந்து ஒரு கேள்விச் சுருளை எடுங்கள்!

மணிமாறன் : இதோ ஒரு கேள்விச் சுருளை எடுத்து விட்டேன், சேர்! கேள்வி இதுதான். பெண்ணின் குருதியில் இருக்கும் செவ்வணுக் கலன்களிலும் பார்க்க ஆணின் குருதியில் இருக்கும் செவ்வணுக் கலன்கள் அதிகமாம். அது சரியா? இதே போல், பெண்ணின் மூளையின் நிறை ஆணின் மூளை நிறையிலும் அதிகமாம். இவை உண்மையா சேர்?

ஆசிரியர் : நல்ல கேள்விகள்! உங்கள் கேள்விச் சுருளில் இரண்டு வினாக்கள் இருக்கின்றன. இரண்டு வினாக்களுக்கும் தொடர்புகள் உள்ளன. முதலில்..... பெண்ணின் செவ்வணுக் கலன்கள் பற்றிப் பார்ப்போம். அதுவும், பெண்ணியம் பற்றி அதிகம் சிந்திக்கும் இன்றைய காலகட்டத்தில், நாம் ஆண்-பெண் பற்றிய சிந்தனைகள் எமது சமூக அமைப்புக்கும் அதன் வளர்ச்சிக்கும் மிகவும் தேவையான சிந்தனைகள்.அந்த வகையில்.... ஆண்-பெண் உடல் அமைப்புகள் பற்றிய விளக்கங்கள் எங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். முதற்கேள்விக்கு முதலில் விடையைப் பார்ப்போம்.

பெண்ணில் இருக்கும் செவ்வணுக் கலன்கள் ஆணில் இருப்பதிலும் குறைவு என்பது உண்மையே. அதாவது, நல்ல உடல் வலுவுள்ள ஓர் ஆணில் ஒரு மில்லி லீட்டர் குருதியை எடுத்துக் கொண்டால், அதில் 5.6 மில்லியன் செவ்வணுக் கலன்கள் இருக்கும். ஆனால், அதே அளவு பெண்ணின் குருதியிலும் 4.8 மில்லியன் செவ்வணுக் கலன்கள் தான் இருக்கும். இந்த... ஏறக்குறைய ஒரு மில்லியனுக்குக் குறைவாகச் செவ்வணுக் கலன்களை வைத்துக் கொண்டு தான் பெண்ணின் சாய்புகள், ஆணிலும் மென்மையானவை எனக் கருதுகிறோம். ஆனால், வல்லமையில் ஆணும், பெண்ணும். ஒன்றுதான். இதைப் போலவே, பெண்ணின் மூளையின் நிறையும் இருக்கிறது. மூளையின் நிறையில் வித்தியாசங்கள் இருந் தாலும் அறிவுத் திறனில் எவ்வித வேறுபாடும் இல்லை. ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானமே! இந்த இடத்தில், திருவள்ளுவரின் குறள் கூறுவது போல், "உருவு கண்டு எள்ளாமை வேண்டும்" என்ற சிந்தனை நமக்கு வேண்டும். பெண்ணின் பெருமை அவளுடைய குருதியில் இருக்கும் செவ்வணுக் கலன்களின் எண்ணிக்கையிலும் பூரண மூளை நிறையிலும் இல்லை. அவளுடைய அறிவுத் திறன், ஆற் றல் யாவும் அவளுடைய செயல்பாடுகளிற்றான் பெரிதும் தங்கி இருக்கும்.

மேகலா : நன்றாய்ச் சொன்னீர்கள் சேர்!

மணிமாறன் : உண்மைதான் சேர். எங்கள் ஆசிரியர், அறிவியல் நோக்கில் உண்மை உள்ள படி கூறுகிறார்.

## நுளம்புகள்

ஆசிரியர் : சரி.... மணிமாறா, எமது கலசத்தில் இன்னுமொரு கேள்விச் சுருளையும் நீங்கள் எடுங்கள் பார்க்கலாம்.

மணிமாறன் : சரி சேர். இதோ எடுக்கிறேன். மனிதருக்கு உபத்திரவம் தரும் நுளம்புகள் பற்றி ஏதாவது விசேட குறிப்புகள் உண்டா? இதுதான் கேள்வி. இதற்கு நானே பதில் கூறுகிறேன்.......

ஆசிரியர் : நல்லது மணிமாறா. நீங்களே பதிலையும் கூறுங்கள்!

மணிமாறன் : பெண் நுளம்பு ஒரு மாதம் மட்டுமே வாழும் என்றும், ஆண் நுளம்பின் வாழ்வு ஒரு வாரந்தான் என்றும் அறிகிறோம். பெண் நுளம்பு எங்களுடைய குருதியை உறிஞ்சிக் குடித்து உபத்திரவம் தருவதில்லை. ஆண் நுளம்பு புலாலில் ஓடும் இரத்தத்தைக் குடிக்காது. அது ஒரு தாவர பட்சினி! தாவரங்களில் உள்ள சாற்றை உறிஞ்சிக் குடித்து உயிர் வாழும்.

மேகலா : அப்படி என்றால் பெண் நுளம்பு பொல்லாதது என்று சொல்ல வருகிறீர்களா மணிமாறன்?

மணிமாறன் : நான் அப்படிச் சொல்லவில்லை.! ஆண் நுளம்பு பொல்லாத ஜந்து இல்லை என்றுதான் ஒரு சஞ்சிகையில் படித்தேன். இதற்கு எங்கள் ஆசிரியர் தான் பதில் தர வேண்டும் எனக் கருதுகிறேன்.

(தொடர்ச்சி 19ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்பா பற்றித் தெரிந்து கொள்வோம்!

## வெண்பா

புலவர்க்கு வெண்பா புலி என்பார்கள். ஆயினும் வெண்பா எழுதக் கற்றுக் கொண்டால் மற்றவகைப் பாக்களை இலகுவாகப் புரிந்தது கொள்ள இயலும். எழுதிப் பழகி, வெண்பா கைவரப் பெற்றால், வெண்பா எழுதுவது எளிதாகி விடும்.

வெண்பாவில் ஏழு வகைகள் உண்டு. அவையாவன:-

1. குறள் வெண்பா - இது இரண்டு அடிகளைக் கொண்டது.
2. இன்னிசைச் சிந்தியல் வெண்பா - இது மூன்று அடிகளைக் கொண்டது.
3. நேரிசைச் சிந்தியல் வெண்பா - இதுவும் மூன்று அடிகளைக் கொண்டது.
4. இன்னிசை வெண்பா - இது நான்கு அடிகளையுடையது.
5. நேரிசை வெண்பா - இதுவும் நான்கு அடிகளைக் கொண்டது.
6. ப..்றொடை வெண்பா - இது நான்கு அடிகளுக்கு மேல் பன்னிரண்டு அடிகளுக்குள் அமைவது.
7. கலி வெண்பா - பன்னிரண்டு அடிகளுக்கு மேல் பல அடிகளைப் பெற்று வருவது.

இனி இன்று பெரும்பாலும் எழுதப்படும் நேரிசை வெண்பா பற்றி அறிவோம்.

## நேரிசை வெண்பா

நேரிசை வெண்பா நான்கு அடிகளைக் கொண்டது. முதல் மூன்று அடிகளும் நான்கு சீகளைக் கொண்டதாகவும், இறுதி அடி மூன்று சீர்களைக் கொண்டதாகவும் அமையும். முதல் இரண்டு அடிகளுக்கும் ஒரு வகை எதுகையும், மற்ற இரண்டு அடிகளுக்கு வேறொரு வகை எதுகையும் வரும். நான்கு அடிகளுக்கும் ஒரே வகையான எதுகையும் வரலாம். இரண்டாவது அடியின் நான்காவது சீர் கீறிடப்பட்டுத் தனிச் சீராய் இருக்கும். இத்தனிச்சீர் முதல் இரு அடிகளுக்கும் வரும் எதுகை கொண்டு அமைய வேண்டும். மொத்தமாய் நேரிசை வெண்பாவில் இந்த எதுகையையும் சேர்த்த ஐந்து எதுகைகள் வரும். வெண்பாவில் செப்பலோசை சிதைவுறாமல் இருக்க வேண்டும். பொதுவாய் வெண்பாவுக்குரிய வெண்டளை பின்பற்றப்பட வேண்டும். பொதுவாய் எல்லா விதமான வெண்பாவுக்கும் போல, இறுதிச் சீர் ஓரசைச் சீராக நாள், மலர், காசு பிறப்பு என்னும் வாய்ப்பாட்டுள் அடங்க வேண்டும்.

வெண்டளை

தேமா, புளிமா } இவற்றின் முன் நிரையசை வரவேண்டும்

கூவிளம், கருவிளம் } இவற்றின் முன் நேரசை வரவேண்டும்

தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் } இவற்றின் முன் நேரசையே வரவேண்டும்

நேரிசை வெண்பாவுக்கான உதாரணம்

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றுந் தா.

இவ்வெண்பாவில் வெண்டளை பற்றி அறியக் கீழ் உள்ள விபரங்களைப் பார்க்கவும்.

| | | | |
|---|---|---|---|
| பாலுந் | தெளிதேனும் | பாகும் | பருப்புமிவை |
| (தே-மா) | (புளி-மாங்-காய்) | (தே-மா) | (கரு-விளங்-காய்) |
| (நேர்-நேர்) → | (நிரை-நேர்-நேர்) → | (நேர்-நேர்) → | (நிரை-நிரை-நேர்) |
| நாலுங் | கலந்துனக்கு | நான்தருவேன் | - கோலஞ்செய் |
| (தே-மா) | (கரு-விளங்-காய்) | (கூ-விளங்-காய்) | (தே-மாங்-காய்) |
| (தே-மா) → | (நிரை-நிரை-நேர்) → | (நேர்-நிரை-நேர்) → | (நேர்-நேர்-நேர்) |
| துங்கக் | கரிமுகத்துத் | தூமணியே | நீயெனக்குச் |
| (தே-மா) | (கரு-விளங்-காய்) | (கூ-விளங்-காய்) | (கூ-விளங்-காய்) |
| (நேர்-நேர்) → | (நிரை-நிரை-நேர்) → | (நேர்-நிரை-நேர்) → | (நேர்-நிரை-நேர்) |
| சங்கத் | தமிழ்மூன்றுந் | தா | |
| (தே-மா) | (புளி-மாங்-காய்) | (நாள்) | |
| (நேர்-நேர்) → | (நிரை-நேர்-நேர்) → | (நேர்) | |

இச்செய்யுளில் சீர்களுக்கிடையில் தளை பொருந்தி வரும் விதத்தைக் கண்டீர்கள். மேலே குறிப்பிட்டபடி மா-முன்-நிரையும் விளம்-முன்-நேரும் காய்-முன்-நேரும் வந்துள்ளன. இவையே வெண்டளையாகும்.

வெண்பாவில் இவ்வாறு தளைகள் பொருந்திவரின் வெண்பாவுக்குரிய செப்பலோசை தப்பாது அமையும்.

வெண்பாவின் இறுதிச் சீர் ஓரசைச்சீராய் வர வேண்டும்.

அச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டில் அமையும். உதாரணமாய்ச் சில வெண்பாக்களின் இறுதி அடிகளை நோக்குக.

எரியத் தழல் மூட்டு வேன் (நாள்) (நேர்)
காயரைத்து வைப்பாய் கறி (மலர்) நிரை)
எய்போற் கிடந்தான்என் ஏறு (காசு) (தேமா)
வீழப் படுவார் விரைந்து (பிறப்பு) (புளிமா)



ஆக்கம் :- ஜின்னாஹ்

**குறிப்பு : வெண்பாக்கள் படைக்கும் ஆக்கத் திறனுள்ளோர், ஏதாவது தலைப்பில் நான்கு வரி வெண்பாக்களை எழுதியனுப்பினால் தரம் பார்த்துப் பிரசுரிக்கப்படும்.**

ஆசிரியர்-




## பாலர் பாடல்களுக்குச் சந்தம் அவசியமா?

"கிழக்கிலங்கையிலிருந்து வெளிவந்திருக்கும் மிகவும் அருமையான குழந்தைக் கவிதை நூல் "இன்பச் சிமிழ்". இதில் 38 பாடல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. பாடல்கள், படிக்கும் பாலர்களின் வயதுக்கேற்ற வகையில், 3 வயதான பிள்ளைகளுக்குரிய கவிதையிலிருந்து, படிப்படியாக வயதெல்லைக் கேற்ற வகையில், கையாளும் பொருளின் காத்திரத்திற்கேற்றாற் போல் தொகுக்கப்பட்டுள்ளமை இச்சிறு நூலின் சிறப்பம்சமாகும்.

பாலர் இலக்கியம் தனித்துவமானது. இதன் படைப்பாளிகள் தமது மூப்பை மறந்து குழந்தைகளாக மாறி, அவர்களுக்குரிய பொருள்களைப் பொறுக்கியெடுத்துப் பாலர்களுக்குப் புரியும் படியான மொழியில் அவைகளைப் படைக்க வேண்டும். வயது வந்தோர்கள் இவற்றைப் படிக்க நேர்ந்தால், அவர்களும் பாலர்களாக மாறியே இவைகளை இரசிக்க வேண்டும்.

பாலர் இலக்கியம் படைப்போர் சொல்ல வேண்டியதை, அநுபவித்து, உணர்வு பூர்வமாகச் சொல்ல வேண்டும்.

பாலர் பாடல்களுக்குச் சந்தம் மிகவும் முக்கியமானது. இதுவே பாடலைப் படிக்கும் பிள்ளையின் மனதில் பாடலை ஆணித்தரமாகப் பதிய வைக்கின்றது. பாலர் இலக்கியத்திற்கு இலக்கணச் சுத்தம் அத்தியாவசியமானதல்ல."

-15.11.2004 ஆம் திகதி கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் கவிஞர் மண்டூர் தேசிகனின் "இன்பச் சிமிழ்" என்ற கவிதைத் தொகுப்புக்கு நயப்புரை வழங்கிய திரு.வ.இராசையா மேற்கண்டவாறு சொன்னார்.

நிகழ்வு திரு.பெரியதம்பிப்பிள்ளை விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

-நான் இப்பொழுது மண்டூரில் மிகவும் பின் தங்கிய ஆரம்பப் பாடசாலை ஒன்றிற்கு அதிபராக இருக்கின்றேன். இங்கு ஆசிரியர்கள் குறைவு. சில நாட்களில் 5 வகுப்புக்களினதும் மாணவர்களை நானே படிப்பிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். இத்தகைய சங்கடமான வேளைகளில் எனக்குக் கைகொடுப்பது பாடலும், சித்திர முந்தான். நாட்டார் பாடல்களைப் பிள்ளைகள் தங்களது சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற வகையில் சொற்களை மாற்றிப் படிப்பார்கள். அவ்வேளைகளில் நான் புதுமையான கருத்துக்களைப் புகுத்தி அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பேன். அந்த அநுபவ விளைச்சலே இப்பாலர் பாடல்கள்.

-நூலாசிரியர் கவிஞர் மண்டூர் தேசிகன் மேற்கண்டவாறு தனது ஏற்புரையில் கருத்து வெளியிட்டார்.

### நூல் அறிமுகம்

எழுத்தாளர்கள், வாசகர்கள், "பொதிகை" க்கு ஆக்கங்கள், செய்திகள், படங்கள் என்பவற்றை அனுப்பி வைக்கலாம். ஆக்கங்கள் மிகச் சுருக்கமாக இருக்க வேண்டும். நூல் அறிமுகங்கள் செய்ய விரும்புவோர் நூலின் இரண்டு பிரதிகளை நூல் அறிமுகம், ஆசிரியபீடம், த.பெ.எண் 2037, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.




சோக்கல்லோ சண்முகம் வில்லுப் பாட்டுக் குழுவினரின் கலா நிகழ்வு சென்ற வாரம் கொழும்புத் தமிழ்ச்சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம் பெற்றபோது, கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் பெ.விஜயரத்தினம் உரை நிகழ்த்துவதையும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.டி.பண்டாரநாயக்காவுக்குச் சமூக சேவையாளர் ச.இலகுப்பிள்ளை பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், ஊடகவியலாளர் செல்வி கார்த்திகா ருக்மணி காந்தன் உரை நிகழ்த்துவதையும், பான் ஏசியா வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆர்.நடராஜா தம்பதியினர் ஒலிவாங்கித் கருவிகளை எஸ்.சண்முகநாதனுக்கு (சோக்கல்லோ சண்முகம்) பரிசளிப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004 டிசம்பர் 20 திங்கட்கிழமை

விஜய்

# இத்தாலி – 2

(சென்ற இதழின் தொடர்ச்சி)

## ஐரோப்பாவும் அதன் நாடுகளும்!



### மொழியும் மதமும்

இத்தாலி நாட்டின் பிரதான மதமாக உரோமன் கத்தோலிக்க மதமுள்ளது. இந் நாட்டின் மொத்தச் சனத் தொகையில் 98% த்தினர் கத்தோலிக்கராக இருந்தபோதும் தேவாலய ஆராதனைகளில் 25% த்தினர் மட்டுமே தவறாது பங்கேற்கிறார்கள். இந் நிலையை நோக்கும் போது கத்தோலிக்க தேவாலயங்களின் ஆதிக்கமானது படிப்படியாகக் குறைந்து வருவதை எடுத்துக் காட்டுகின்றது. இத்தாலி நாட்டின் அரச கரும மொழியாக இத்தாலிய மொழி உள்ளது. இதனை நாட்டிலுள்ள அனைவரும் பயன்படுத்துகின்றனர்.

### கல்வி

பல ஆண்டு காலமாக உரோமர்களின் கல்வி முறையே இத்தாலியில் ஆதிக்கம் செலுத்தி வந்தது. இதன் காரணமாக பல பிரசித்தி பெற்ற கல்வி நிலையங்கள் இங்கு தோன்றின. ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் போது அருங்கலைகளின் மத்திய நிலையமாக இத்தாலியே காணப்பட்டது. இதன் காரணமாக ஐரோப்பாவின் பிரதான கல்வி நிறுவனமாக இத்தாலி நாடு செயற்பட்டு வந்தது.

இத்தாலி நாட்டின் இன்றைய கல்வி முறையானது 1859 ஆம் ஆண்டிலேயே உருவானது. அன்று முதல் பாடசாலைக் கல்வி முதல் உயர் கல்வி வரையான சகல கல்வி நடவடிக்கைகளும் இக் கல்வி முறையின் கீழேயே நடைபெற்று வருகின்றன. இந் நாட்டின் சிறந்த தேர்ச்சி பெற்ற தொழிற்படை அணியை உருவாக்குவதே இத்தாலி நாட்டின் கல்வி முறையின் முக்கிய நோக்காகும். 6 வயது முதல் 14 வயது வரையிலுள்ளோருக்கு இலவசமாகக் கல்வி வழங்கப்படுவதுடன் இக் கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உயர் கல்வியானது இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் முதற் பகுதியானது ஏதேனும் தொழில் தொடர்பாக விசேட பயிற்சி பெறும் நோக்குடன் வழங்கப்படுகின்றது. மறு பகுதி சிறப்புப் பயிற்சியுடன் தேர்ச்சி பெறும் நோக்குடன் அதே துறையில் தொடர்ந்து வழங்கப்படுகின்றது.

### கலாசாரம்

மேற்கு நாட்டுக் கலாசாரத்தை உலகம் பூராவிலும் பரப்புவதற்கு இத்தாலி நாடு பெருந் துணை புரிந்தது எனலாம். உலகெங்கும் பல்வேறு கலைகளும், தொழில்நுட்பமும் வளர்ச்சியடைய இந்நாட்டின் கட்டிட நிர்மாணக் கலைச் சிற்பிகளும் மற்றும் சித்திர, நாடக, நாட்டிய, இலக்கிய விற்பன்னர்களும் பெரும் பங்களிப்பினை வழங்கினர் எனலாம். அரசியல் ரீதியில் கடந்த 150 வருடங்களாகவே இத்தாலி ஒரு தனி நாடாகச் செயற்பட்டு வந்த போதிலும் கலாசாரத்தைப் பொறுத்தவரையில் இத்தாலி நாட்டிற்கு மட்டும் அது உரித்தானது என அதனை எல்லைப் படுத்திவிட முடியாது. மகிழ்ச்சி உற்சவங்கள், சங்கீத, நடன நிகழ்ச்சிகள் மற்றும் உல்லாசப் பிரயாணம் என்பவைகளில் இத்தாலியின் பிரதான கலாசார இலட்சணங்களைக் காணக் கூடியதாக உள்ளது.



மைக்கல் ஆஞ்சலோ, அன்ஜெலிகோ, அன்டோனியோ வெவெல்ட், ஜியோஷினோ ரொசினி போன்ற உலகப் பிரசித்தி பெற்ற சித்திரக் கலைஞர்களும், கட்டிட நிர்மாணக் கலைஞர்களும் இத்தாலியில் உருவானவர்களே!

### பொருளாதாரம்

இரண்டாம் உலக யுத்தத்திற்கு முன்னர் இத்தாலி நாடானது ஒரு விவசாய நாடாக இருந்தது. ஆனால் இரண்டாம் உலக யுத்தத்தின் பின் இத்தாலி நாட்டின் வட பகுதியானது ஒரு கைத்தொழில் பிரதேசமாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. இதன் காரணமாகத் தென் பகுதியில் வசித்த பலர் தொழில் நிமித்தம் வட பகுதி நோக்கி இடம் பெயரத் தொடங்கினர். எப்படியிருந்த போதும் இன்று உலகின் பிரதான கைத்தொழில் நாடுகளில் ஒன்றாக இத்தாலி நாடு முன்னணியில் உள்ளது. கைத்தொழில் துறையில் முன்னேறியிருந்த போதும், இத்தாலி நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக உள்ளது. இங்கு தொழிற்படையின் அதிகரிப்பே ஒரு பெரும் சவாலாக உள்ளது. விவசாயத் துறையில் ஒலிவ் மற்றும் திராட்சை உற்பத்திகள் பொருளாதாரத்தின் பெரும் பங்களிப்பை வழங்குகின்றன. திராட்சை உற்பத்தியுடன் வைன் உற்பத்தி வெற்றிகரமாகச் செய்யப்பட்டு வருகின்றது. இத்தாலி. வருடத்திற்கு 6.4 மில்லியன் கியூபிக் லீற்றர் வைனை உற்பத்தி செய்கின்றது. அத்துடன் இங்கு 2.4 மெட்ரிக் தொன் ஒலிவ் உற்பத்தி செய்கின்றது. கைத் தொழில் துறையைப் பொறுத்தவரை பாரிய அளவில் துணி வகைகளை உற்பத்தி செய்து வருகின்றது. அத்துடன், இரசாயனப் பொருட்களையும் கணிசமான அளவு உற்பத்தி செய்கின்றது.

### போக்குவரத்து மற்றும் தொலைத் தொடர்புகள்

நீர் வழிப் போக்குவரத்தே இத்தாலி நாட்டின் பிரதான போக்குவரத்து மார்க்கமாக உள்ளது. 2002 ஆம் ஆண்டில் சுமார் 1512 கப்பல்கள் இந்நாட்டிற்குச் சொந்தமாக இருந்தன. நாட்டின் பிரதான துறைமுகங்களாக ஜெனோவா, டிரிஸ்டே, டெரன்டோ மற்றும் வெனிஸ் என்பவை காணப்படுகின்றன. இங்கு சுமார் 16,499 கிலோ மீற்றர் நீளமான புகையிரதப் பாதை காணப்படுகின்றது. இவற்றில் அதிகமான புகையிரதப் பாதைகளில் மின்சாரத்தால் இயங்கும் புகையிரதங்களே ஓட விடப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள பெருந்தெருக்களின் நீளமானது 479,688 கிலோ மீற்றராக உள்ளது. இதில் 7,000 கிலோமீற்றர் நீளமான பாதைகள் கடுகதிப் பாதையாக உள்ளன.

இத்தாலி நாட்டின் பிரதான விமானச் சேவையாக அலிதாலியா விமானச் சேவை உள்ளது. இவ் அலிதாலியா விமானச்சேவையே உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானச் சேவையை நடாத்தி வருகின்றது.

இத்தாலி நாட்டிலுள்ள உரோம் விமான நிலையம் மூலமே பெருமளவிலான விமானச் சேவைகளும் நடைபெற்று வருகின்றன. இத்தாலி நாட்டின் மிகப் பெரிய விமான நிலையமாக மிலான் நகருக்கண்மையிலுள்ள மெல்பென்சா விமான நிலையம் உள்ளது.

தொலைத் தொடர்புகளைப் பொறுத்த வரை 1976 ஆம் ஆண்டு முதல் இத்தாலிய அரசாங்கம் இதன் நிர்வாகத்தைப் பொறுப்பெடுத்தது. இன்று நாட்டில் 160 வானொலிச் சேவைகளும், 80 தொலைக்காட்சிச் சேவைகளும் செயற்பட்டு கின்றன. பல சேவைகள் காணப்பட்ட போதும் புதினப் பத்திரிகைகளையே இத்தாலியர்கள் கூடுதலாக விரும்புகின்றனர். நாட்டில் 1000 பேரில் 104 பேர் புதினப் பத்திரிகைகளை வாசிப்பவர்களாக உள்ளனர்.

### நிர்வாகம்

1946 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 02 ஆம் திகதி முதல் இத்தாலி ஜனநாயகக் குடியரசாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் படி நாட்டின் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதியிடம் உள்ளது. இத்தாலி நாட்டின் அரசியலமைப்புச் சட்டப்படி ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர். 50 வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். ஜனாதிபதியொருவர் 7 ஆண்டு காலம் நாட்டை ஆளலாம். ஆனால் அரசைக் கொண்டு நடாத்தும் பொறுப்பு பிரதமரிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. பிரதமரை ஜனாதிபதியே தெரிவு செய்வார். தேர்தலின் போது அதிக வாக்குகளைப் பெற்று அதிகாரத்திற்கு வரும் நபரை ஜனாதிபதி பிரதமராக தெரிவு செய்வார்.

அரசியலமைப்பு அதிகாரமானது செனற் சபை மற்றும் பிரதிநிதித்துவ சபை என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இச் சபைகளின் காலம் அரசியலமைப்புச் சட்டப்படி ஐந்து வருடங்களாகும். பிரதிநிதிகள் சபையில் 630 அங்கத்தவர்கள் இருப்பதுடன் செனற் சபையிக்கு 326 பேர் தெரிவு செய்யப்படுவார்கள்.

### பாதுகாப்பு மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள்.

இத்தாலி நாட்டின் உச்ச நீதிமன்றமாக உயர் நீதிமன்றம் உள்ளது. இது இறுதி மேன் முறையீட்டு நீதிமன்றமாகக் கருதப்படுகின்றது. அத்துடன் அரசியலமைப்பு நீதிமன்றமாகவும் செயற் படுகின்றது. உயர் நீதிமன்றமானது 15 நீதிபதிகளைக் கொண்டிருக்கும்.

இத்தாலி நாட்டில் நிரந்தரமாகச் சுமார் 216,800 படைவீரர்கள் உள்ளனர். ஆனால் இராணுவத்தினர் மட்டும் 128,000 பேரே உள்ளனர்.

எஸ். கிறேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவ இருளிலிருந்து மனிதனை மீட்டெடுக்க மனித உருவில் பிறந்த யேசுபாலன்!

## டிசம்பர் 25: நத்தார் தினம்!

டிசம்பர் 25 ஆம் திகதி யேசுபாலன் பிறந்த நாளாகும். உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவ மக்கள் யேசுபாலன் பிறந்த இந்த நாளினை வெகு விமரிசையாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

இதனை வெறுமனே ஒரு கொண்டாட்ட தினமாக மட்டும் கருதாமல், யேசுவின் பிறப்பிலுள்ள பின்னணியையும் நாம் அறிதல் வேண்டும்! உலகைப் படைத்து- அதில் மனிதனையும் படைத்தான் இறைவன். ஆனால் இறைவனால் படைக்கப்பட்ட மனிதனோ, இறையச்சம் இல்லாமல் தீய வழியில் செல்லத் தொடங்கினான்.

மனிதனின் இந்தத் தீமையான நடவடிக்கைகள், அழிவினை நோக்கியும், பாவ இருளினை நோக்கியும் அவனைக் கொண்டு செல்வதாகவே அமைந்தன. எனவே, மனிதனை இந்தப் பாவ வாழ்க்கையிலிருந்து மீட்டெடுத்து, அவனை நல்வழியில் கொண்டு செல்வதற்காக, இறைவனே மனித உருவெடுத்து, யேசு பாலனாக இம்மண்ணில் அவதரித்தார்.

கன்னி மரியாளுக்கு மகனாகப் பிறந்த யேசுபாலன், வெறும் மாட்டுக் கொட்டிலிலேயே அவதரித்தார்.

அவர் மிகவும் எளிமையான முறையில் எளிமையான இடத்தில் இவ்வாறு பிறந்தமையானது மனித இனத்தின் ஏற்றத்தாழ்வை ஒழிப்பதற்கான நல்லதோர் எடுத்துக் காட்டாகவே அமைந்தது.

அதிலும் பெத்தலகேம் நகரினிலே, நடுங்கும் கடுங்குளிரினிலே, கோமகனாம் யேசுபாலன், மாட்டுத் தொட்டிலினில் பிறந்தாரென்றால் அவர் மனிதர் மீது வைத்துள்ள அன்பிற்கு அதுவே நல்லதோர் எடுத்துக்காட்டு.

யேசுபாலனின் இந்தப் பிறந்த தினத்தையே நத்தார் தினமாகக் கிறிஸ்தவர்கள் கொண்டாடி வரும் அதே வேளை, தனது பிறப்பின் மூலம் யேசுபாலன் எடுத்துக் காட்டிய எளிமைத் தன்மையும், ஏற்றத்தாழ்வுகளற்ற வாழ்க்கை வழிமுறைகளையும், மனிதர்களாகிய நாம் பின்பற்றி நடப்பதோடு, மனித நேயத்துடன் வாழ்தலின் மூலம் இந்த நத்தார் தினத்தினை அர்த்தபுஷ்டி மிக்கதாக அமைத்திடல் வேண்டும்.

மேலும், இந்த நத்தார் தினமானது இளம் பராயத்தில் உள்ளவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நாளாகவும் அமைந்துள்ளது. இவர்களுக்கு நத்தார் தாத்தா தான் நினைவிற்கு வருவார்! ஒவ்வொரு வருடமும் நத்தார் தினம் வரும்போதும் இளம் பராயத்தினருக்கு இந்த நத்தார் தாத்தா விதவிதமான பரிசில்களை வழங்கி அவர்களை மகிழ்விப்பதைக் காணலாம்.

## எளிமையாகப் பிறந்து எளிமையாக வாழக் கற்றுக் கொடுத்தார்!



அனைவருமே, நத்தார் தினத்தையொட்டி வாழ்த்து மடல்களை அனுப்புவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். நேச உணர்வினை வெளிக்காட்டும் நல்லதோர் நடவடிக்கையாகவும் இது கொள்ளப்படுகின்றது. டிசம்பர் 25 ஆம் திகதி யேசுபாலன் பிறந்தமையால், 24 ஆம் திகதி இரவிலிருந்தே கிறிஸ்தவ மக்கள் யேசுவின் பிறப்பு நேரமான நள்ளிரவு 12 மணிக்காகக் காத்திருக்கத் தொடங்கி விடுவர்.

ஆலயங்களிலும் யேசு பிறப்பையொட்டி நள்ளிரவுச் சிறப்புப் பூசைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். கிறிஸ்தவ மக்கள் குடும்பமாகச் சென்று இந்த ஆலய வழிபாடுகளில் கலந்து கொள்வர். எதிர்பார்த்தது போலவே நள்ளிரவு 12 மணியாகியதும், பட்டாசு கொளுத்தி, வாணவெடி கொளுத்தி, ஆரவாரித்து ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வர்.

மேலும், வீடுகளிலும் நத்தார் மரம் வைத்து அதனை அலங்கரித்து, வீட்டையும் அழகு படுத்திச் சோடனைகள் செய்து அனைவரும் புத்தாடை உடுத்திச் சுவையான பட்சணங்களை உண்பதோடு, அவற்றை அயலவர்களுக்கும் வழங்கி மகிழ்வதும் நத்தார் தினத்தின் ஒரு சிறப்பம்சமாகும்.

இத்தனை மகிழ்ச்சியும் ஏன்? நமது யேசுபாலன் பிறந்து விட்டார் என்பதனால் தானே? ஆம்... அது போலவே இந்த யேசுபாலன் எதற்காக நம்மத்தியில் மனிதராகப் பிறந்தாரோ? அவரது அந்த எண்ணத்தை ஈடேற்ற வேண்டியதும் நமது கடமையல்லவா?

அதற்கிணங்க பாவ வாழ்க்கை வாழாமல், மன்னிக்கும் குணம் கொண்டு இரக்க சிந்தையுடன் மற்றவர்களுக்கு முன் மாதிரியுடன் நல்ல மனிதர்களாக வாழ்ந்து கிறிஸ்துவின் பிறப்பினை அர்த்தமுள்ளதாக்க வேண்டும் என்பதே யேசுபிறந்த இந்த நத்தார் தினத்தில் மனதில் கொள்ள வேண்டிய முக்கிய விடயமாகும்.


வீ. ரெட்லி ஹெரிசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வானில் பறக்கும் பறவைகளைக் கண்டது முதல் மனிதனுக்கும் பறக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அந்த ஆசையின் பிரதிபலிப்பின் காரணமாகவே ஆகாயக் கப்பல் உருவாகியது. அந்த ஆகாயக் கப்பல் உருவாகிய விதம் பற்றிய கதை இது.**

# ஆகாயக் கப்பல்களி





## வாயுச் சக்தியினால் வானில் பறக்கும் கப்பல்

வானத்தில் பறக்க வேண்டிய அவசியம் மனிதனுக்கு ஏற்பட்டதையடுத்து அந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் உருவானது தான் ஆகாயக் கப்பல். ஆகாயக் கப்பல் எவ்வாறு விண்ணில் பறக்கிறது என்பதை இங்கு பார்ப்போம். எந்தவொரு பொருளும் மேலே செல்லும் போது அதற்கு எதிரான புவியீர்ப்புச் சக்தியை எதிர்கொள்ளவேண்டும். அவ்வாறான ஒரு சக்தியை ஆகாயக் கப்பல் மிஞ்ச வேண்டும். அப்படியானால் தான் ஆகாயக் கப்பல் விண்ணில் பறக்கமுடியும்.

## ஆகாயக் கப்பலின் கதை

காற்றுக்கு நிறை இல்லை என்றே நம்மில் பலர் நினைக்கிறோம்.! ஆனால் அது அவ்வாறு அல்ல. காற்றுக்கு நிறை உண்டு. கடல் மட்டத்தில் ஒரு கன அடி காற்றின் நிறை ஒன்றரை அவுன்ஸ் ஆகும். மற்றைய வாயுக்களுடன் ஒப்பிடும் போது ஐதரசன் வாயுவே மிகவும் நிறை குறைந்தது. அதனைச் சரியாக விளங்கிக் கொள்ள இந்தச் சமன்பாட்டைப் பார்ப்போம். மற்றைய வாயுக்களின் நிறை ஒரு கன அடிக்கு ஒன்றரை அவுன்ஸ் ஆக இருக்கும்போது ஒரு கன் அடி ஐதரசனின் நிறை ஒன்றரை இன் 1/16 அவுன்ஸ் ஆகும். பண்டிகை மற்றும் உற்சவ காலங்களில் பலூன்கள் மேலே பறக்க விடப்படுவதை நீங்கள் கண்டிருப்பீர்கள் அந்தப் பலூன்கள் காற்றில் மிதந்து செல்வதற்கு இவை ஐதரசன் வாயுவினால் நிறைக்கப்பட்டிருப்பதே காரணமாகும். பாரிய அளவிலான ஆகாயக் கப்பலும் இவ்வாறு வாயு நிரப்பப்படுவதால் தான் விண்ணில் பறக்கிறது. இந்தக் கப்பலின் வெளிப்புற உறையில் பெருமளவு ஐதரசன் வாயு நிரப்பப்பட்டுள்ளது. காற்றைவிட இந்த வாயு இலேசாக இருப்பதால் அது மேலே செல்ல முடிகிறது. இதுவே ஆகாயக் கப்பலின் ஆரம்பமாகும். ஆகாயக் கப்பலை உருவாக்கும் முயற்சியில் முதலில் ஈடுபட்டவர் யார்? என்பதை நிச்சயமாகக் கூற முடியாது.

எனினும் பிரெஞ்சுப் பொறியியலாளரான கிபர்ட் முதன்முதலாக ஆகாயக் கப்பலை உருவாக்கியவர் என்று கருதப்படுகின்றார்.

## முதலாவது ஆகாயக் கப்பல் பரீட்சிக்கப்பட்டமை

முதன்முதலாக உருவாக்கப்பட்ட ஆகாயக் கப்பலைக் கிபர்ட் 1852 இல் பரீட்சித்துப் பார்த்தார். அந்த ஆகாயக் கப்பல் 143 அடி நீளத்தைக் கொண்டிருந்தது. அதிக அகலமான இடத்தில் அதன் விட்டம் 40 அடி. இதற்கு மூன்று குதிரைச் சக்தி வலுவைக் கொண்ட நீராவி என்ஜின் இணைக்கப்பட்டிருந்தது. பலூனுக்கு 20 அடி கீழே மனிதர்கள் பயணம் செய்யக் கூடிய வகையில் கூடமொன்றும் அமைக்கப்பட்டிருந்தது. கிபர்ட்டின் கப்பலை அவரே ஓட்டினார். அதன் முதல் பயணத்தில் பாரிஸில் இருந்து 17 மைல் தூரம் அதனை அவரே ஓட்டிச் சென்றார். மணிக்கு 5 மைல் என்ற வேகத்தில் அக்கப்பலை ஓட்டிச் செல்ல அவரால் முடிந்தது.


கிபர்ட்டின் இந்த ஆகாயக் கப்பல் வெற்றி பெற்றமை இதன் மூலம் உங்களுக்கு தெரிந்திருக்கும். எனினும் தேவையான சக்தியைக் கொண்ட என்ஜின் இணைக்கப்படாததால் அது மெதுவாகவே பயணம் செய்தது பெரும் பிரச்சனையாக இருந்தது. இணைக்கப்பட்டிருந்த மூன்று குதிரைச் சக்தி வலு கொண்ட என்ஜின் அதன் பாரத்துக்கு ஏற்ப வழங்கிய சக்தி போதுமானதாக இருக்கவில்லை. இதற்கிடையே இவ்வாறான ஆகாயக் கப்பலுக்குப் புதிய என்ஜின் ஒன்றை இணைக்கும் முயற்சியில் பலர் ஆய்வுகளை மேற்கொண்டனர். எனினும் பெற்றோல் என்ஜின் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து ஆகாயக் கப்பல் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பித்தது.

பாரிஸில் வசித்து வந்த பிரேசிலைச் சேர்ந்த செல்வந்தரான அல்பர்டோ சென்டிஸ் டூமன்ட் புதிய ஆகாயக் கப்பலொன்றை நிர்மாணிக்கும் முயற்சியில் இறங்கினார். இவர் உருவாக்கிய ஆகாயக் கப்பல் மற்றைய ஆகாயக் கப்பல்களை விட வித்தியாசமானதாக இருந்தது. அது மிகவும் உயர்ந்த தரத்தில் அமைந்திருந்தது. தனது ஆகாயக் கப்பலுக்காக டூமன்ட், பெற்ரோல் என்ஜின் ஒன்றை இணைத்தது விசேட அம்சமாகும். அதனால் அது நன்றாகப் பறக்கமுடிந்தது. அத்துடன் எந்தத் திசையிலும் அதனைத் திருப்ப முடிந்தமை மற்றொரு சிறப்பம்சமாகும்.

## புதிய நிர்மாணங்கள்

எனினும் இந்த ஆகாயக் கப்பலால் திருப்தியடையாத அவர் மேலும் ஆகாயக் கப்பல்களை உருவாக்கும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டார். 1901 இல் அவரது ஆறாவது ஆகாயக் கப்பலை நிர்மாணித்தார். அதில் அவர் பாரிஸில் இருந்து சென்ட் கிளவுட் என்ற சிறிய நகரத்துக்கு வெற்றிகரமாகப் பறந்தார். அந்தப் பயணத்தின் போது அவர் ஐபல் கோபுரத்தைச் சுற்றி வந்ததுடன் பயணத்தை ஆரம்பித்த இடத்துக்கே மீண்டும் வந்து சேரவும் முடிந்தது. ஏழு மைல் தூரமான இந்தப் பயணத்துக்கு 29 நிமிடங்கள் 31 செக்கன்கள் எடுத்தது. கஷ்டமான அந்தப் பயணத்துக்கு ஒரு லட்சத்து 25 ஆயரம் பிராங் அவருக்குப் பரிசாகக் கிடைத்தது.

இதற்கு 40 வருடங்களின் பின் பெர்டினன்ட் வோர்ன் செப்லின் என்ற லெப்டினன்ட் ஜெனரல் பதவி வகித்த இராணுவ அதிகாரி இத்துறையில் மேலும் ஆய்வுகளை மேற்கொண்டார். இவர் ஜேர்மன் இராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்றவராவார். தனது 49 வது வயதில் இவ்வாறான ஆய்வுகளில் ஈடுபட்ட இவர் அதன் மூலம் உலகளாவிய ரீதியில் அவரது பெயரைப் பதித்துக் கொள்ள முடிந்தது.




ஹென்றியின் வான் கப்பல்

## செப்லின்

அதுவரை உலகில் உருவாக்கப்படாத வகையிலான ஆகாயக் கப்பலொன்றை உருவாக்குவதில் செப்லின் வெற்றி கண்டார். முதன்முறையாக உலோகத்தைப் பயன்படுத்தி ஆகாயக்கப்பலை உருவாக்கியவர் செப்லின் ஆவார். எனினும் இவ்வாறான அவரது முதல் முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. அது மட்டுமன்றி அவர் இவ்வாறு நிர்மாணித்த ஏழு முயற்சிகளும், தோல்வியிலேயே முடிவுற்றன. எனினும் அதற்குப் பின்னர் அவர் நிர்மாணித்த இரண்டு ஆகாயக் கப்பல்களும் வெற்றியளித்தன. அத்துடன் அவை பயணிகள் போக்குவரத்துக்கும் பயன் படுத்தப்பட்டன. ஜேர்மனியின் ஆறு நகரங்களுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்துக்கு இவை பயன் படுத்தப்

பாரிய ஆகாயக் கப்பலொன்றின் குறுக்குத் தோற்றம்.





முதலாவது ஆகாயக்கப்பல் அதன் நிறுத்துமிடத்தில் இருந்து வெளியே கொண்டுவரப்படுகின்றது.





R34 என்ற ஆகாயக்கப்பல் 1919 இல் அத்திலாந்திக் சமுத்திரத்தின் கிழக்கில் இருந்து மேற்குவரை பயணம் செய்த முதலாவது ஆகாயக்கப்பல் இது.



அத்திலாந்திக் சமுத்திரத்தின் மறுகரையை நோக்கி வெற்றிகரமாகப் பயணம் செய்த செப்லின் ஆகாயக் கப்பல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலூன் அல்லது ஆகாயக் கப்பல் என்று வார்த்தைகளால் மட்டும் அல்லது உங்களுக்கு தெரிந்த சாதனம் இன்று சரித்திரத்தில் மட்டும் இடம்பெறும் பொருளாக மாறியுள்ளது. எனினும் முதலாவது உலக யுத்தத்தின் போது இது மிகவும் பிரபல்யமாக இருந்தது.



# ...ரின் தோற்றமும் வளர்ச்சியும்!


பட்டதாகக் கூறப்படுகிறது. முதலாவது உலக யுத்தம் இடம் பெற்ற காலத்தில் ஆகாயக் கப்பலுக்கான தேவை அதிகரித்ததுடன் அவற்றை யுத்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவது பற்றியும் அக்கறை காட்டப்பட்டது. இந்த ஆகாயக் கப்பலைத் தவிர வேறு கப்பல்களை உருவாக்க வேண்டிய அவசியமும் அப்போது ஏற்பட்டது.

## ஆகாயக் கப்பல்களின் பயன்

முதலாவது உலக யுத்த காலத்தில் 62 ஆகாயக் கப்பல்கள் நிர்மா[illegible]கப்பட்டன. இவை பிரதானமாக ஜேர்மன் கடற்படையினரின் விமான[illegible] சேவைக்காகப் பயன்படுத்தப்பட்டன. முதலாவது உலக யுத்தத்தின் போது அந்த ஆகாயக் கப்பல்களைப் பயன் படுத்தி பிரிட்டனின் மீது 51 தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 12 தாக்குதல்கள் லண்டன் நகரத்தின் மீது இடம் பெற்றன. எனினும் இந்த ஆகாயக் கப்பல்களின் மீது எளிதாகத் தாக்குதல் நடத்த முடியும் என்பதைத் தெரிந்து கொள்ளப் பிரிட்டிஷாருக்கு அதிக காலம் செல்லவில்லை. ஆரம்ப காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆகாயக் கப்பல்களில் பலூனுடன் ஒரு பெரிய குடை இணைக்கப்பட்டிருந்தது. இந்தக் குடை பயணிகளின் போக்குவரத்துக்குப் பயன் படுத்தப்பட்டது. ஐதரசன் நிரப்பப்பட்ட பலூன் காற்றை விட இலேசாக இருந்ததால் மேலே செல்ல முடிந்தது. என்ஜின்கள் இல்லாமல் நிர்மாணிக்கப்பட்ட ஆகாயக் கப்பல்கள் காற்றின் உந்துதல் மூலமே செலுத்தப்பட்டன. எனவே இவற்றைச் செலுத்தியவர்களால் தமக்குத் தேவையான திசைகளில் செல்ல முடியாமல் இருந்தது. எனினும் பேர்னினன்ட் நிர்மாணித்த ஆகாயக் கப்பல்களின் முக்கியத்துவம் அவற்றைச் செலுத்தியோர் தமக்குத் தேவையான திசைகளில் அவற்றைத் திருப்ப முடிந்ததேயாகும்.

ஆரம்ப கால ஆகாயக் கப்பல்களில் உள்ள பலூன்கள் நிரப்பப்பட்ட ஐதரசன் வாயுவின் அழுத்தத்துக்கு ஏற்ற வகையில் வேறுபட்டன. எனினும் சில காலத்துக்குப் பின் நிரந்தரமாகவே ஒரே வடிவத்தில் அமைக்கப்பட்டன. இதனையடுத்துச் சில காலத்தின் பின் பிரிட்டனும் ஆகாயக் கப்பல் தொடர்பான ஆய்வுகளில் இறங்கியது. முதலாவது உலக யுத்தத்தின் போது எதிர்கொள்ள வேண்டியிருந்த பாதகமான அனுபவங்[illegible]ளை பிரிட்டனுக்கு இவ்வாறான ஆய்வுகளில் ஈடுபட வேண்டிய நிலையை ஏற்படுத்தின. பிரிட்டனின் முதலாவது ஆகாயக் கப்பல் 1907 இல் பறக்க விடப்பட்டது. இந்த நிகழ்வு லண்டன் நகரில் இடம்பெற்றது.


ஆகாயக் கப்பலை உருவாக்க வேண்டும் என்ற பிரிட்டனின் அடிப்படை நோக்கம் அவற்றை யுத்த நடவடிக்கையில் ஈடுபடுத்துவதாகும். எதிரிகளின் நீர் மூழ்கிக் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு இவை பயன்படுத்தப்பட்டன. யுத்த காலத்தின் போது இவ்வாறான ஆகாயக் கப்பல்கள் இலட்சக்கணக்கான மைல்கள் பறந்தன. அவ்வாறான பயணங்களின் போது 48 பேர் உயிரிழந்ததும் குறிப்பிடத்தக்கது. பிரிட்டன் உருவாக்கிய ஆகாயக் கப்பல்களுக்கு மாதிரியாகப் பிரிட்டனால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஆகாயக் கப்பல்களே பயன் பட்டன. இதே மாதிரிகள் யுத்தத்தின் பின்னர் பிரிட்டனால் ஆகாயக் கப்பல்களை உருவாக்கவும் உதவின. பிரிட்டனால் சுட்டு வீழ்த்தப்பட்ட ஜேர்மன் ஆகாயக் கப்பல்களை மாதிரியாகக் கொண்டு R34, R33 என்ற இரு ஆகாயக் கப்பல்களைப் பிரிட்டன் 1916 ல் நிர்மாணித்தது. இவை பெரும் வெற்றியளித்தன. இதில் R34 என்ற ஆகாயக் கப்பல், அத்திலாந்திக் சமுத்திரத்தைச் சுற்றி மீண்டும் பயணத்தை ஆரம்பித்த இடத்துக்கே வந்து சேர்ந்தது. 1919 இல் இடம் பெற்ற இந்தப் பயணமே கிழக்கில் இருந்து மேற்குத் திசைக்குப் பயணம் செய்த, முதலாவது ஆகாயக் கப்பல் பயணம் என்று சரித்திரத்தில் இடம் பிடித்தது.



1937 மே 6 ஆம் திகதி மிகவும் மோசமான விபத்தில் ஹின்டன் பேர்க் ஆகாயக் கப்பல் சிக்கியது.




இரண்டாவது உலக யுத்தத்தின்போது அமெரிக்க விமானப் படையினர் ஆகாயக் கப்பல்கள் பலவற்றை உபயோகித்தனர்.



பாரிய ஆகாயக் கப்பலொன்றை இயக்கும் இடம்

## ஆகாயக் கப்பலின் சோகக் கதை

1926 க்கும் 1930 க்கும் இடைப்பட்ட காலத்தில் R100 மற்றும் R101 ஆகிய இரு ஆகாயக் கப்பல்களைப் பிரிட்டன் உருவாக்கியது. எனினும் முறையற்ற அரசியல் தலையீடு காரணமாக அந்த ஆகாயக் கப்பல்களின் கதை சோகமாகவே முடிந்தது. அந்தக் கப்பல்களின் முதற் பயணமே தோல்வியில் முடிந்ததுடன் அந்தப் பரீட்சார்த்தப் பயணத்தில் 46 உயிர்கள் பலியாகின.

ஆகாயக் கப்பல்களின் சரித்திரத்தில் ஜேர்மனியின் பெயர் அனைத்துப் பக்கங்களிலும் இடம்பெறும். பயணிகள் போக்குவரத்துக்கு அவை பெருமளவில் பயன்படுத்தப்பட்டன. அவர்களது மிகவும் தரமான நிர்மாணம் என்று LZ 127 என்ற ஆகாயக் கப்பலைக் குறிப்பிடலாம்.

1928 இல் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கப்பலுக்காக 39 இலட்சத்து 50 ஆயிரம் கன அடி ஐதரசன் வாயு நிரப்பப்பட்டது. இதன் நீளம் 775 அடி. ஐந்து என்ஜின்களைக் கொண்ட இந்த ஆகாயக் கப்பல் மணிக்கு 60 மைல் வேகத்தில் பறக்கும் திறனைக் கொண்டிருந்தது. 20 பயணிகளை அத்திலாந்திக் சமுத்திரத்துக்கு ஊடாக அந்த ஆகாயக் கப்பல் பயணிக்க வைத்து.

ஒன்பது வருடங்களாகச் சேவையில் ஈடுபட்ட இந்த ஆகாயக் கப்பல் 10 இலட்சம் மைல் தூரம் பறந்ததுடன் அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாக 1800 பயணிகளை அழைத்துச் சென்றுள்ளது. 1934 இல் மற்றொரு ஆகாயக் கப்பல் உருவானது. இதன் நீளம் 800 அடியாகும். 1937 ஆம் ஆண்டு மே மாதத்தில் இதன் முதலாவது பயணம் இடம் பெற்றது. 'ஹய்டன்பேர்க்' என்று இந்த ஆகாயக் கப்பலுக்குப் பெயரிடப்பட்டது.

முதலாவது பயணத்தின் போது அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாக நியூயோர்க் நோக்கிச் சென்ற இந்த ஆகாயக் கப்பல் சிறிது தூரம் செல்லு முன்னர் கப்பலின் பின் புறத்தில் தீப்பிடித்தது. இந்தத் தீயினால் கப்பல் திருத்தமுடியாத அளவுக்குச் சேதமுற்றதுடன், கப்பலில் இருந்த 100 பயணிகளில் 35 பேர் உயிரிழந்தனர்.

## பலூனுக்குக் கிடைத்திருந்த இடம் கை நழுவியது.

இந்தத் தீ விபத்துப் பற்றிய காரணத்தை ஜேர்மன் அதிகாரிகள் கண்டறியும் நோக்கத்துடன் விசாரணை நடத்திய போது பெருமளவு ஐதரசனை ஓரிடத்தில் குவித்து வைத்ததால் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரியவந்தது. இதற்காக ஹீலியம் வாயுவை பயன்படுத்தவதன் மூலம் தீப்பிடிப்பதைத் தவிர்க்க முடியுமென இந்த விசாரணையில் தெரிய வந்தது. எனினும் இதற்காகப் பெருமளவு செலவு செய்ய வேண்டியிருந்தது. இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஹீலியம் வாய்வு அடங்கிய ஆகாயக் கப்பல்கள் நிர்மாணிக்கப்பட்டன. எனினும் மிகவும் தரமான போக்குவரத்து முறைகள் புழக்கத்துக்கு வந்ததால் ஆகாயக் கப்பல் என்ற பலூனுக்கு இருந்த இடம் கை நழுவியது. தற்போது காலநிலை தொடர்பான தகவல்களைத் தெரிந்துகொள்வதற்காக இவ்வாறான பலூன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது பூந்தோட்டம்



எனது பூந்தோட்டம் மிகவும் அழகானது.
அதில் பல வர்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கும்.
அதில் சில பூக்கள் மணமுள்ளவை, சில மணமற்றவை.
அதில் இடை, இடையே பல அழகான மரங்களும் உண்டு.
இவற்றில் எனக்குப் பிடித்த பூ ரோஜாப் பூ.
நான் அதை மிகவும் கவனமாக வளர்க்கிறேன்.

எஸ்.மதிவதனா, தரம் 7,
பரி/அந்திரேயர் மகளிர் மகா வித்தியாலயம், நாவலப்பிட்டி

## புத்தகம் தோன்றிய வரலாறு

உலகில் மத்திய காலம் வரை புத்தகம் எதுவும் இருக்கவில்லை. அன்றைய மக்கள் "பெப்பிரஸ்" எனப்படும் நாணற் காகிதத்தில் எழுதி, அவற்றைச் சுருளாக வைத்தே காத்து வந்தனர். ரோமானியர்கள் இவற்றை 'வால்யூமன்' என்றனர். ஐந்தாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து மக்கள் ஆட்டுத் தோலைப் பதப்படுத்தி எடுத்த வரைதோலிலும் (Parchment), கன்றுத் தோலிலிருந்து தயாரித்த மெல்லிய தாளிலும் (Vellum) எழுத ஆரம்பித்தனர். தோலின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதப்பட்டது. மத்திய



காலத்தில் புத்தகங்கள் இலத்தீன் மொழியில் எழுதப்பட்டன. பின்னர் காகிதத்தின் தரம் மேம்பட்டது. அச்சுக்கலையும் வளர்ச்சியுற்றது. இதன் பயனாகப் புத்தகம் இன்றைய உருவை அடைந்தது. உலகின் மிகப் பெரிய புத்தகம் 'த லிட்டில் ரெட் வில்லியம் பி.உட் என்பவரால் எழுதி வெளியிடப்பட்டது. ஏழு அடி இரண்டு அங்குல உயரம் கொண்ட இந்தப் புத்தகத்தைத் திறந்தால் அது பத்தடிக்கு விரியும். இதன் எடை 364 மெட்ரிக் தொன், விலை ஐந்து இலட்சம் ரூபாய் ஆகும். வெளியிடப்பட்ட காலம் 1967-1971. தினமும் 10 மணி நேரம் இதனை படிக்க ஒதுக்கினால் முழுவதையும் படித்து முடிக்க ஆறாண்டு காலம் பிடிக்கும்.

ஆர். விசித்ரா, தரம் 9,
க/பாரதி தமிழ் வித்தியாலயம்,
வத்தேகம.

### நீங்களும் எழுதலாம்

கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் அறிவு சார்ந்த விடயங்களை எழுதி அனுப்புபவர்கள், உங்கள் ஆக்கங்களை நேர்த்தியாகவும், அழகாகவும், ஒழுங்காகவும் எழுதி அவற்றைப் பாடசாலை அதிபரிடமோ அல்லது வகுப்பாசிரியரிடமோ கொடுத்து உறுதிப்படுத்தி எமக்கு அனுப்பி வையுங்கள். தரமான ஆக்கங்களுக்கு "விஜய்"யில் என்றும் களம் உண்டு. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :

மாணவர் ஆக்கங்கள்
'விஜய்' த.பெ.எண். 2037
கொழும்பு

## கருணை உள்ளம் கொண்ட அன்னை தெரேஸா

ஆதரவற்றவர்களின் அன்புத் தெய்வம், கருணையின் வடிவம், கர்த்தரின் அருட்கொடை என்றெல்லாம் போற்றப்படும் பெருமை மிக்கவர் அன்னை தெரேஸா. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள அல்பேனியாவில் விவசாயக் குடும்பம் ஒன்றில் 1910 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 27ம் திகதி பிறந்தார். இவர் அவ்வூர் அரசின் பாடசாலையில் தமது ஆரம்பக் கல்வியைக் கற்றார். குழந்தைகள், பெரியோர்கள், நோயாளிகளுடன் அன்புடனும், மரியாதையுடனும் இவர் பழகினார். 1925 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்த இவர் அல்லல் படும் மக்களுக்குத் தொண்டாற்ற விரும்பினார். தமது இளவயதிலேயே கிறிஸ்தவப் பொது நலச்சேவை எனும் அமைப்பில் சேர்ந்தார். 1928ம் ஆண்டில் லோரேட்டா கன்னியர் மடத்தில் சேர்ந்தார். பின்பு இந்தியாவில் டார்ஜிலிங்கில் ஆசிரியப் பயிற்சி பெற்றார். ஆசிரியப் பயிற்சியின் பின்னர் கல்கத்தாவிலுள்ள கன்னியர் மடத்தில் நிரந்தர உறுப்பினரானார்.

கல்கத்தா வீதியில் அம்மையார் கண்ட காட்சிகள், அவரது உள்ளத்தைப் பெரிதும் நெகிழச் செய்தன. பசிக் கொடுமையாலும், நோயாலும் மக்கள் வருந்துவதைக் கண்டார் அவர். பஞ்சத்தால் வாடும் மக்களுக்கு உணவளிப்பதோடு, ஏழைக் குழந்தைகள் கல்வி




பெற வழி செய்ய வேண்டுமென அவரது கருணையுள்ளம் விரும்பியது. இதனால் 1950 ஆம் ஆண்டு அன்பின் தூதுவர்கள் என்ற இயக்கமொன்றை ஆரம்பித்தார். இவ்வியக்கம், மக்கள் ஆதரவுடன் வளரத் தொடங்கியது. சமூக நலப் பணிகளைச் செய்வதை இவ் இயக்கம் நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது.

தொடர்ந்து குழந்தைகளை ஆதரித்து வளர்க்கும் பொருட்டு "நிர்மல் கென்னடி இல்லம்" என்ற இல்லத்தையும் நிறுவினார்.

அன்னையின் அரும் பணிகளை உலகம் போற்றிய வேளையில் அவரை நாடிப் பல பரிசுகள் தேடி வந்தன.

1977 ஆம் ஆண்டு அன்னைக்கு நோபல் பரிசு கிடைத்தது. 1979 ஆம் ஆண்டில் 3,00000 டொலர் பெறுமதியான "பாலசான் சர்வதேச விருது" வழங்கப்பட்டது. அன்னையின் பணிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும் வகையில் இந்திய அரசு "பாரத ரத்னா" எனும் அதியுயர் விருதினை வழங்கியது. தபால் தலையை வெளியிட்டுக் கௌரவித்தது. அனைத்து உயிர்களிடத்திலும் அன்பையும், நம்பிக்கையையும் துளிர்க்கச் செய்த அன்னை தெரேஸா தமது 77ம் வயதில் அதாவது 1997ம் ஆண்டு காலமானார்.

எம்.எல்.எம்.ஷிபான், தரம் 13
வணிகப் பிரிவு, புனித
அந்தோனியார் கல்லூரி, க[illegible].




## உலகின் முக்கியமான எரிமலைகள்

| எரிமலையின் பெயர் | நாடு | உயரம் (மீற்றர்) |
|---|---|---|
| கொட்டே நபக்கி | ஈக்குவடோர் | 5897 |
| மவுன்ற் வறங்கல் | அலஸ்கா | 4267 |
| மவுனாலோவா | ஹவாய் | 4170 |
| எறிபஸ் | அந்தாட்டிக்கா | 3718 |
| எட்னா | சிசிலி | 3349 |
| கில்லன் | சிலி | 3200 |
| நுவா | நியூசிலாந்து | 2796 |
| அசாமா | ஜப்பான் | 2543 |
| ஹெக்லா | ஐஸ்லாந்து | 1491 |
| ஸ்ரொம் போரி | இத்தாலி | 925 |

றஷ்கா முஸ்லிஹ், மாறை/அறபா தேசிய பாடசாலை, வெலிகாமம்.

## இயேசுவின் வருகை

எமக்காக மானிடனாய்
மண்ணில் உதித்தார் - யேசு
எம் பாவங்கள் போக்கிடவே
கஷ்டங்கள் நீக்கிடவே
வழி காட்ட வந்தார் - யேசு

நரகத்தை தடுத்து - மனிதனை



பரலோகத்திற்கு கொண்டு சென்றார் - யேசு
மனந்திரும்பு மகனே, என் மகளே
என்று அழைக்கிறார் யேசு!

யே.அமலதாஸ், தரம் 8B,
C.C.T.M.Y, வவுனியா.

## தொலைக்காட்சி..!

நாட்டினிலே நடப்பதெல்லாம்
நல்லப்பல செய்தியெல்லாம்
வீட்டினிலே காட்டி விடும்
வித்தையான பெட்டி இது

அலை கடல் தாண்டி வந்த ஒலி
அலைகளினால்
பலதையும் அறிய வைக்கும் பெட்டி
இது!

விண்வெளியில் நடப்பவரை
வீட்டிற்கே கொண்டு வந்து
கண் எதிரில் காட்டி விடும்



களிப்படையச் செய்து விடும்
வீட்டினிலே திரையரங்கும்
வீடெங்கும் கலைமுழங்கும்
விந்தையான பெட்டி இது!


பி.பாலதேவன், தரம் 5,
ப/தெளிவத்தை த.வி, பதுளை.

## வான் நிலவே வா நிலவே

நிலவே நீயும் நீள் வானில்
நிலவுவதால் நிலவென்றாரோ?
உலகோர் உவக்க ஒளி தந்து
உலவும் உனக்கேன் உருமாற்றம்?

வழியில் உன்னை கார்மேகம்
வந்தே மறைப்பது அநியாயம்
எழில் மிகு தண்மதி உன்மீது
எரிச்சல் ஏன்தான் கொண்டதுவோ?

நல்லது செய்ய மேண்டுமென



நாடிச் சேவை செய்வோர்க்குத்
தொல்லை துன்பம் தடை எல்லாம்
தோன்றும் அதற்கு நீ உவமை!

எப்.நளிபா, ஆண்டு 9B,
க/அல்அஸ்ஹர் மத்திய கல்லூரி,
தெஹியங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்



த.அர்ஜூன்,
தரம் $8^{D}$,
இந்துக் கல்லூரி,
பம்பலப்பிட்டி.
**அங்கத்துவ இல-157**



எம்.அர்ஸாத்,
தரம் $8^{B}$,
ஹம்ஸா முஸ்லிம் ம.வி,
கொழும்பு 15.
**அங்கத்துவ இல-158**



ஜி.லிரான் நிரோஷ்,
தரம் $7^{B}$,
பது/பாரதி ம.வி,
பதுளை.
**அங்கத்துவ இல-159**



என்.அசோகன்,
தரம் $9^{A}$,
க/ரஜவல்ல தமிழ்
தே.பாடசாலை.
**அங்கத்துவ இல-160**



வி.தர்ஷிகா,
தரம் 06,
மெதடிஸ்ட் த.வி,
கொழும்பு 13.
**அங்கத்துவ இல-161**



ஏ.கிப்சியா பானு,
தரம் $7^{B}$,
அல்.அக்ஷா தேசிய
பாடசாலை, கற்பிட்டி.
**அங்கத்துவ இல-162**



அஜிமுஷான்,
தரம் $8^{D}$,
டீ.எஸ்.சேனைநாயக்க
கல்லூரி, கொழும்பு 07.
**அங்கத்துவ இல-163**



பி.பிரேமபாலன்,
ஆண்டு $8^{C}$,
யா/இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
**அங்கத்துவ இல-164**



சி.கீர்த்திகா,
தரம் $7^{B}$,
யா/இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
**அங்கத்துவ இல - 165**



ச.சுதன்,
தரம் $8^{B}$,
மன்/சித்திவிநாயகர்
இந்து தே.பா.மன்னார்.
**அங்கத்துவ இல-166**



எஸ். உமைர் அஹமட்
தரம் $5^{A}$,
அல் ஜுப்ரியா வித்தி.
மட்டக்களப்பு
**அங்கத்துவ இல-167**



வி. பிரசாத்
தரம் $9^{B}$,
புனித அந்தோனியார்
கல்லூரி, வத்தளை
**அங்கத்துவ இல-168**


மாணவர் கழகத்திற்கெனச் சிலர் பிரசுரத்திற்குத் தரமற்ற புகைப்படங்களை அனுப்பி வருகின்றனர். இவ்வாறான புகைப்படங்கள் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஆகையால் பிரசுரத்திற்கு ஏற்ற புகைப்படங்களை அனுப்பி வைக்கவும்.

# இதுதான் உலகம்!

கணவனும், மனைவியுமான மாயவனும், மாதவியும் பேசிக் கொண்டிருக்கையில் மாயவனிடம் மாதவி, “இந்த உலகத்தில் எவ்விதக் குற்றங்குறையும் கேளாமல் வாழ்வது எப்படி?” எனக் கேட்டாள். அதற்கு மாயவன்,

“குற்றங்குறை கேளாமல் எவராலும் வாழவே முடியாது. நன்மை செய்தாலும், தீமை செய்தாலும் கடைசியில் குற்றம் குறையையே கேட்க வேண்டியிருக்கும்.....” எனக் கூறினான்.

“நீங்கள் சொல்வது உண்மைதான் என்பதை உங்களால் நிரூபித்துக் காட்ட முடியுமா?” என மாதவி கேட்டாள்.



“சரி..... நிரூபித்துக் காட்டுகிறேன்” எனக் கூறிய மாயவன்,

“நான் எனது கழுதையின் மீது ஏறி அமர்ந்து வருகிறேன், நீ எனது பின்னால் நடந்து வா” என்றான். சொன்னபடியே மாயவன் கழுதையின் மீது ஒய்யாரமாக அமர்ந்து செல்ல, மனைவி மாதவி நடந்து சென்றாள். இப்படி அதிக தூரம் செல்லக் கிடைக்கவில்லை. அவர்களுக்கு எதிரே சிலர் வந்து நின்றனர். மாயவனைப் பார்த்த அவர்கள்,

“இந்தக் கிழவனுக்கு வெட்கமில்லையோ.. தெரியவில்லை... மனைவியை நடக்கச் சொல்லிவிட்டு இவன் மட்டும் கழுதையின் மீதேறிச் செல்கிறானே...” எனச் சத்தமிட்டுப் பேசிக் கொண்டனர்.

இது மாயவனின் காதிலும் கேட்டது. உடனே அவன் கழுதையின் மேலிருந்து கீழே இறங்கினான். மனைவியைக் கழுதையின் மீதேறி அமருமாறு கூறினான்.

இப்போது மாதவி கழுதையின் மீதேறி அமர்ந்து வர, மாயவன் பின்னே நடந்து வந்து கொண்டிருந்தான். அப்போது இன்னும் சிலர் கூட்டமாக அவ்வழியே வந்து கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் மாயவனைப் பார்த்து,

“இவன்தான் மிகப் பெரும் முட்டாள். மனைவியைக் கழுதையின் மீது அமரச் செய்து விட்டு, அவன் நடந்து செல்கிறானே.... இரண்டு பேருமே ஒன்றாகக் கழுதையின் மீது அமர்ந்து செல்ல வேண்டியதுதானே......” எனப் பேசிக் கொண்டனர்.

இதனைக் கேட்ட மாயவன், மனைவியோடு தானும் கழுதையின் மீதேறி அமர்ந்து கொள்ள, இருவருமாகக் கழுதையின் மீது சென்று கொண்டிருந்தனர்.

அப்போது அவர்களால் சிறிதளவு தூரமே செல்ல முடிந்தது. இன்னும் சிலர் இவர்களின் எதிரே வந்து.....

“இவனுக்கு மனச்சாட்சி இல்லையோ?....... தெரியவில்லை. இந்த அப்பாவிக் கழுதையின் மீதேறி இருவரும் செல்கின்றனரே... கழுதைக்கு இது எந்தளவிற்குக் கஷ்டத்தை ஏற்படுத்தும் என்பதை புரிந்துக் கொள்ளாத மனிதனாக இவன் இருக்கிறானே!.....”எனக் கூறினர்.

இதனைக் கேட்ட மாயவனும், மாதவியும் இருவருமே கழுதையின் மேலிருந்து கீழிறங்கி... கழுதையை வெறுமனே நடக்கச் செய்து விட்டுத் தாம் இருவரும் கால்நடையாகச் சென்று கொண்டிருந்தனர். அப்போது மற்றுமொரு கூட்டம் எதிரே வந்தது. “இந்த மனிதன் ஒரு முட்டாள். கழுதையும் இருக்கத்தக்க அதன் மீது அமர்ந்து செல்லாமல் மனைவியுடன் நடந்து செல்கின்றானே...” எனக் கூறிச் சிரித்தனர்.

அப்போது, ஒருவிதப் புன்னகையுடன் மனைவி மாதவியைப் பார்த்த மாயவன்- “இப்போது இந்த உலகத்தைப் பற்றிப் புரிந்து கொண்டாயா....? நாம் எதைச் செய்தாலும் இந்த மனிதர்கள் அதில் குற்றங்குறை தேடிக் கொண்டேதான் இருப்பார்கள். அதற்கு நமது இந்தக் கழுதைப் பயணமே நல்லதோர் உதாரணமாக அமைந்து விட்டதல்லவா?” எனச் சொன்னான்.

அதற்கு மாதவி..“ஆமாம் நீங்கள் கூறுவது உண்மை தான் என்பதை இப்போது தான் புரிந்து கொண்டேன்” என்றாள்.

செய்வதை நாம் திருந்தச் செய்தால் மற்றவர்களைப் பற்றி அக்கறைப்பட்டு நம்மை நாமே குழப்பிக் கொள்ளத் தேவையில்லை என்பதற்கு இக்கதை நல்லதோர் எடுத்துக் காட்டு அல்லவா?


## விஜய் சந்தா விபரம்

**‘விஜய்’ பத்திரிகையினைக் கீழ்க் காணும் சந்தாத் தொகையினைச் செலுத்தித் தபாலிலும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.**

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ 269/= | ரூ 130/= |
| தபாலில் | ரூ 364/= | ரூ 182/= |

**பின்வரும் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்கள்.**
**(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)**

**கூப்பன்**

பெயர்/Name ------------------------------------------------
முகவரி/Address ------------------------------------------------
தொ.பே.இல/T.P No: ------------------------------------------------
மின் அஞ்சல்/E-mail ------------------------------------------------
விண்ணப்பிப்பது : பாடசாலை/நிறுவனம்/வாசகர் (தேவையற்றதை வெட்டிவிடுங்கள்)
எமக்கு .................. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்

----------------------        ----------------------
கையொப்பம்        திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ, காசோலையாகவோ அனுப்பலாம். காசுக் கட்டளையை (**MO**) மாற்றும் தபால் கந்தோர்: **SLAVE ISLAND POST OFFICE** எனக் குறிப்பிட்டு, **CIRCULATION MANAGER, Wijeya News Papers Ltd, No-08, Hunupitiya Cross Road, Colombo 02** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். காசோலை அனுப்புவோர் **Wijeya News Papers Ltd** என்ற பெயருக்கு எழுதவும்.

**மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல : 2314714 ext -523**
**Email: vijey@wijeya.lk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருகங்கள் கூட்டமாக வாழ்வது ஏன்?


மனிதர்கள் சுயநலம், சமூகப் பற்றின்மை போன்ற காரணிகளால் சமூக அல்லது கூட்டு வாழ்க்கையில் இருந்து ஒதுங்கித் தனித்து வாழ முடியும். ஆனால் மிருகங்கள், பறவை இனங்கள் அனேகமாகப் பிறப்பு முதல் இறப்பு வரை கூட்டமாகவே வாழ்கின்றன.

யானைக் கூட்டம், மான் கூட்டம், முயல் கூட்டம், நரிக்கூட்டம் என்றெல்லாம் நாம் பேசுகின்றோம். அதே போன்று தான் பறவைகளும், மீனினங்களும் கூடக் கூட்டமாகவே வாழ்கின்றன.

வாழும் காலமெல்லாம் கூட்டமாக வாழும் மிருகங்களும் சில காலத்திற்கு மட்டும் கூட்டமாக வாழும் மிருகங்களும் உள்ளன. இருந்தபோதும் மிருகங்க



**கடல் வாழ் உயிரினங்களிடமும் இதே கூட்டு வாழ்க்கை காணப்படுகின்றது**



ளின் பிரதான செயற்பாடு அவை வாழுகின்ற இடங்களில் கூட்டு வாழ்க்கையாகும்.

## கூட்டு வாழ்க்கையின் முக்கியத்துவம்

கூட்டமாக வாழும்போது ஒன்றுக்கொன்று பரஸ்பர உறவை ஏற்படுத்திக் கொள்கின்றன. தமக்குரிய பொறுப்புக்களை அவை வேறுபடுத்தி வெவ்வேறாக மேற்கொள்கின்றன.

யானை குட்டி ஈன்ற பின்னர், தாய் யானை மட்டுமல்லாது அந்தக் கூட்டத்தில் உள்ள எல்லா யானைகளும் அக்குட்டியைப் பத்திரமாக, பக்குவமாகப் பார்த்துக் கொள்வதில் கவனம் செலுத்துகின்றன. யானைகள் கூட்டத்தில் அவ்வப்போது சில பொறுப்புக்களைத் தம் கூட்டத்தாரிடையே பகிர்ந்து கொள்கின்றன. வெறுமனே பெண் யானைகள் மட்டும் பொறுப்புக்களைச் சுமப்பதில்லை.

உணவு தேடுவதில் இந்தக் கூட்டுச் செயற்பாட்டைக் காணமுடியும். ஒரு யானை உணவு இருக்கும் இடத்தைக் கண்டுவிட்டால் தம் கூட்டத்தாருக்கும் அந்த இடத்தை அறிவிக்கத் தவறுவதில்லை.

ஆபத்து நேர்ந்தால் அல்லது எதிரி மூலம் தமது கூட்டத்தில் ஒருவருக்கு ஆபத்து நேர்ந்தால் உடன் வெவ்வேறு ஓசை எழுப்பி ஏனையவற்றுக்கும் அறிவித்துவிடுகின்றன.

நரி, கரடி ஆகியவற்றின் கூட்டத்திலும் இதே செயற்பாட்டை அவதானிக்க முடிகின்றது.

## ஒற்றுமை

கூட்டமாக வாழும் போது அதில் ஒன்றுக்கு ஆபத்து ஏற்படும் போது எதிர்த் தாக்குதல் நடத்தித் தம்மைப் பாதுகாப்பதிலும் இம் மிருகங்கள் அவதானமாகச் செயற்படுகின்றன. எதிரியை வீழ்த்தி ஆபத்தில் இருந்து பாதுகாக்கும் ஆற்றல் கொண்டனவாக அக்கூட்டத்தில் சில மிருகங்கள் உள்ளன.

**மிருகங்களில் தலைமை ஸ்தானத்தில் உள்ள மிருகம் எப்போதும் கம்பீரம், வீரம், அதிகாரம் கொண்ட தோரணையில் வால், காதுகளை உயர்த்திய வண்ணம் உன்னிப்பாக ஏனையவற்றைக் கவனித்துக் கொண்டிருக்கும்.**

அதே போன்று அவை கூட்டமாக வாழும் போது சிறிய மிருகங்கள் பெரியவற்றிடம் இருந்து பல விடயங்களைக் கற்றுக் கொள்கின்றன. எதை உணவாகக் கொள்ள வேண்டும்? உண்ணக் கூடாதவை எவை? வேட்டையாடும் மிருகங்களாயின் எவ்வாறு வேட்டையாடுவது? பதுங்கும் முறை உட்படப் பல விடயங்களைக் கற்றுக் கொள்கின்றன.

இப்பண்புகள் மிருகங்களுக்கு மிருகம் அவை வாழுகின்ற சூழலுக்கு ஏற்ப வேறுபடுகின்றன.

அவசர நிலைமைகளின் போது எவ்வாறு செயல்படுவது என்பதையும் கூட்டமாக இருப்பதன் மூலமே கற்றுக் கொள்கின்றன.

கூட்டத்தில் சில மிருகங்கள் விசேட அதிகாரங்கள் பெற்றனவாகவும் உள்ளன. அந்த அதிகாரத்தை ஏனையவற்றின் முன்னிலையில் வெளிப்படுத்தவும் தவறுவதில்லை. கூட்டத்தில் தலைமை அல்லது மூப்பு உள்ள மிருகம் கட்டளையிடும், கட்டுப்படுத்தும் பொறுப்புக்களை வகிக்கின்றது. கீழ் நிலையில் உள்ள இளையவைகள் இதனை நன்குணர்ந்து மூத்தவற்றிற்கு விசுவாசம் கொண்டனவாக செயற்படுகின்றன.

குறிப்பாகக் கூட்டத்தைக் கட்டுப்படுத்தும் ஆண், பெண் மிருகங்கள் ஏனையவற்றை விடச் சற்று உருவமைப்பில் பிரமாண்டமானவையாகக் காணப்படும். அவை ஆரோக்கியமானவையாகவும், சுறுசுறுப்பானவையாகவும் இருக்கும்.

இனப்பெருக்கச் செயல்பாட்டில் ஈடுபடுவது இவ்வாறு நன்கு ஆரோக்கியமும் திடகாத்திரமும் உள்ள பெண் மிருகங்களுடனாகும்.



பறவைகள் சரணாலயம்

ஆனாலும் பறவைகளின் கூட்டு வாழ்க்கையில் மிருகங்களை விட வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் தமது கூட்டத்திலிருந்து பிரிந்து சென்று வேறான இருப்பிடத்தை அமைத்துக் கொள்கின்றன. இவ்வாறிருந்த போதும், தமது பகுதிக்குள் நுழையும் ஏனைய பறவைகளைத் தாக்குவதில்லை. ஆனாலும் ஆபத்து நேராமல் உன்னிப்பாகக் கவனித்துக் கொள்கின்றன. ஆபத்து அறிகுறி தென்பட்டால் அதிரடியாகச் செயல்படுகின்றன.

தேனீக்கள் இதற்குச் சிறந்த உதாரணமாகும். நல்ல அதிக தேன் கிடைக்கும் இடங்களைக் கண்டு கொண்டால் தமது ஏனைய தேனீக்களுக்கும் அறிவித்து விடுகின்றன. தேன் கிடைக்கும் நந்தவனங்களில் அவை செயல்படுகின்ற அளவிற்குப் பூவில் உள்ள தேன் எவ்வளவாக இருக்கும் என்பதை அவை தெரிந்து கொள்கின்றன.

தேனீக் கூட்டத்தை வழி நடத்த, இராணித் தேனீ பொறுப்புடன் இயங்குகின்றது. அவைகளுக்குள்- பாதுகாப்பு, கூடு அமைத்தல், தேன் சேகரித்தல் போன்ற செயல்களுக்குத் தனித்தனியாகப் பிரிவுகள் உள்ளன.

அமியூ

**கூட்டமாக வாழும் போது குட்டிகள், இளம் பராயத்தில் இருந்தே மூத்தவைகளிடம் இருந்து பல்வேறு விடயங்களைக் கற்றுக் கொள்கின்றன**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்குச் சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வழங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாகச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# டைனோசரஸின் காலடி



இற்றைக்கு 140 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் இராட்சத மிருகமான டைனோசரஸின் காலடி அடையாளத்தையே இங்கு காண்கிறீர்கள். சுமார் 30 அடி நீளம் கொண்ட நான்கு கால்களைக் கொண்ட இராட்சத டைனோசரஸ் ஒன்றின் காலடி அடையாளமாக இது கருதப்படுவதால் இது தொடர்பான மேலதிக ஆய்வுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

# 'கொட்ஸிலா' விற்கு அடுத்த படியாக 'ஹொக்ஸிலா'!

'கொட்ஸிலா' என்ற இராட்சத மிருகத்தைப் பற்றி நாம் கேள்விப் பட்டுள்ளோம். ஆனால் 'ஹொக்ஸிலா' என்ற இராட்சத மிருகத்தைப் பற்றிக் கேள்விப் பட்டுள்ளோமா? இல்லையல்லவா? இந்த 'ஹொக்ஸிலா' என்ற இராட்சத மிருகத்தைப் பற்றிய தகவலொன்று, ஜோர்ஜியா நாட்டின் 'எலபாஹா' என்ற பிரதேசத்திலிருந்து அறியக் கிடைத்துள்ளது. 12 அடி நீளத்தையும், 9 அங்குல அகலத்தையும் கொண்டுள்ள இந்த 'ஹொக்ஸிலா' மிருகமானது பன்றியின் உருவத்தைக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

'எலபாஹா' பிரதேசத்தில் இவ்வகை மிருகமொன்று கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் கொல்லப்பட்டதையடுத்தே இந்தத் தகவல் வெளிவந்துள்ளது.

காரொன்றின் டயரை விடப் பெரிய அளவிலான தலையைக் கொண்டிருந்த மிருகமொன்று தமது வீட்டின் அருகே வந்திருப்பதை 'ஹொலியோர்க்' என்பவரின் வீட்டுக் காவல்காரன் கண்டுள்ளான். இம்மிருகத்தைக் கண்டு அதிர்ச்சியுற்ற அவன் உடனடியாக அதனைத் தனது துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விட்டான். இது பற்றிக் கேள்விப் பட்ட வீட்டுக்காரரான 'ஹொலியோர்க்' மேற்படி மிருகமானது அபூர்வமான ஒரு மிருகமாக இருப்பதை அறிந்ததோடு, அதன் மாமிசம் உண்பதற்கு ஒவ்வாதது என்பதைப் புரிந்து கொண்டமையால் அதனை வீட்டின் முற்றத்திலேயே குழி தோண்டிப் புதைத்து விட்டார். இது பற்றிக் கேள்விப்பட்ட 'நெஷனல் ஜோக்ரபி நிறுவனம்' இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது.



# இருமலைச் சுகப்படுத்தும் 'சொக்லட்'



சொக்லட் சாப்பிடும் அளவிற்கு, இருமல் குணமடையும் என லண்டனில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

சொக்லட் தயரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் 'கொக்கோ'வில் 'தியோபுரோமைன்' என்ற ஒருவகை இரசாயனம் காணப்படுவதாகவும், இதற்கு இருமலைச் சுகப்படுத்தக் கூடிய தன்மை இருப்பதாகவும் மேற்படி ஆய்வினை மேற்கொண்ட குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக இருமலைச் சுகப்படுத்தவதற்குப் பயன்படுத்தப்படும் மருந்து வகைகளில் சேர்க்கப்படும் 'கொடின்' என்ற இரசாயனத்தை விடச் சொக்லட்டில் காணப்படும் தியொபுரைமைன், கூடிய மருத்துவக் குணத்தைக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. இனியென்ன... இருமல் வந்தால் சொக்லட் சாப்பிட வேண்டியது தான். அதுவும் அளவோடு!

# அகழ்வாராய்ச்சியில் கண்டெடுப்பு!



ஸ்பெயின் பேர்ஸிலோனா பகுதியில் மேற்கொள்ளப் பட்ட புராதன அகழ்வாராய்ச்சியொன்றின் போது சுமார் 13 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் குரங்கினத்தைச் சேர்ந்த ஒரு மிருகத்தின் மண்டையோடொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

'பிரொலெப்பித்திகஸ்' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தக் குரங்கானது சிம்பஞ்சி, கொரில்லா, ஒரங்குட்டான் மற்றும் மனிதர்கள் ஆகிய வழித் தோன்றல்களுள் ஒன்றாக இருக்கலாம் எனவும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# கடலில் புது வகை உயிரினங்கள் கண்டுபிடிப்பு!



கடல்வாழ் உயிரினங்களைப் பற்றியும், கடலில் காணப்படும் தாவர இனங்களைப் பற்றியும் வழக்கமாக வருடாந்த ஆய்வுகள் நடைபெற்று வருவதுண்டு. இதன்படி கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த ஆய்வின் படி 178 புது வகை நீர்வாழ் உயிரினங்களையும், 100 நீர்வாழ் தாவரங்களையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதன் படி கடல்வாழ் உயிரினங்களின் தொகை 230,000 ஆக அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த 10 வருடங்களுக்குள் மாத்திரம் கடல் வாழ் உயிரினங்களைப் பற்றிக் கணிசமான அளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதன்படி ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் இந்த ஆய்வுகளின் படி நீர்வாழ் உயிரினங்களும், தாவரங்களும் புதிது, புதிதாக இன்னுமின்னும் அதிகரிக்கின்றனவே தவிர குறைவடைவதாக இல்லை எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை சுமார் 70 நாடுகளைச் சேர்ந்த 1,000 ஆய்வாளர்கள் இந்த ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ளதாகவும், கடந்த வருடத்தில் மாத்திரம் இவ்வாறு 53 நாடுகளைச் சேர்ந்த 300 பேர் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது.

ஒட்டு மொத்தமான இதுவரை கால ஆய்வுகளின் படி உலக அளவில் கடலில் சுமார் 20,000ற்கும் மேற்பட்ட பல வகையிலான மீன் இனங்கள் காணப்படுவதாகவும், 1.98 மில்லியன் கணக்கிலான தாவர இனங்கள் கடலில் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### போட்டி இல - 2 இன் சரியான விடை :- சுசிலோ பெம்பேங்க்

ஏராளமானோர் சரியான விடையை எழுதியிருந்தனர். இவர்களில் பரிசுக்குரிய 3 அதிர்ஷ்டசாலிகள் :-

1. எஸ்.கதீஜா,
இல.53/1பாடசாலை வீதி,
கொடபிட்டிய,
அக்குறஸ்ஸ.

2. டிறோன் நயில்ஸ்,
இல 703யுனிற்-7,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

3. எஸ்.தேவிகா,
இல.44/52,
கிறிஸ்துராஜா மாவத்தை,
ஹேரக்கித்த, வத்தளை.

### அற்லஸ் கேள்வி - 03

**கேள்வி**

**குரங்கினத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படும் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ள மிருகத்தின் பெயர் என்ன?**

சரியான விடை :...............................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களையும் எழுத மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம்,
கேள்வி - 03,
விஜய்,
த.பெ.எண் 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உயிரைக் குடிக்காதே!

அத்தியாயம் - 6

நரசிம்மன்

அங்கு வந்து கொண்டிருந்த அந்தப் பெண் தன்னை நோக்கித்தான் வருகிறாளா? என்று கூர்ந்து கவனித்தான் மயூரன். சந்தேகமே இல்லை. மயூரனை நோக்கித்தான் அவள் வந்து கொண்டிருந்தாள்.

அவனுக்குக் கைகால்கள் உதறல் எடுத்தன. இனி கால் போன போக்கில் ஓடவேண்டியது தான். அவனுக்குப் புரிந்தது! அங்கு வந்து கொண்டிருப்பது குமுதாவின் ஆவிதான்.

"கடவுளே! நான் எந்த நேரத்தில் இந்த ஊருக்குப் புறப்பட்டேனோ? இங்கு வந்ததிலிருந்து என்னை ஆவி துரத்திக் கொண்டிருக்கின்றதே? குமுதாவின் ஆவி என்னை விடாது போலிருக்கின்றதே..." என்று நினைத்துக் கொண்டு ஓடுவதற்குத் தயாரானான்.

ஆனாலும் அதற்குள் அந்தப் பெண் அவனை நெருங்கி வந்துவிட்டாள். அவன் தப்பினோம், பிழைத்தோம் என்று ஓடத் தயாரானான். ஒரு சில அடிகள் தூரம் நகர்ந்திருப்பான். அந்தப் பெண் சத்தமிட்டாள்.

"தம்பி, தம்பி கொஞ்சம் நில்லுங்கள். ஏன் இப்படி பேயைக் கண்டது போல் ஓடுகிறீர்கள்? உங்களுக்கு என்ன பைத்தியமா?" என்று கேட்டாள்.

அவன் மனதை ஓரளவுக்குத் திடப்படுத்திக் கொண்டு அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் புன்னகைத்தபடி மீண்டும் பேசினாள்.

"ஏன் தம்பி, என்னைக் கண்டு ஓடினீர்கள்? என்னைப் பேய் என்று நினைத்து விட்டீர்களா? நான் பேய் இல்லை. சாதாரணப் பெண்தான்" என்று கூறினாள்.

அவள் பேய் அல்ல. பெண்தான் என்று தெரிந்ததும் அவள் முகத்தைப் பார்க்கவே அவனுக்கு வெட்கமாக இருந்தது. ஆனாலும் அதனை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவன் அவளிடம்-

"நீங்கள்.... நீங்கள்...." என்று தடுமாறினான். அவள் சொன்னாள்,

"நான் யாரென்றா கேட்கிறீர்கள்? பயப்படாதீர்கள். நான் பக்கத்து வீட்டில் இருக்கிறேன். முகுந்தனும், அவன் அம்மாவும் அவசர பயணம் ஒன்று போய்விட்டார்கள். வீட்டுச் சாவியையும், இந்த கடிதத்தையும் உங்களிடம் கொடுக்கச் சொன்னார்கள். இரவுக்குச் சாப்பாடு தயாராக இருக்கிறதாம். அவர்கள் வரும் வரை உங்களுக்குத் தேவையான சாப்பாடு, தேத்தண்ணி என்பவற்றை என்னைக் கொடுக்கச் சொன்னார்கள். எதுவும் தேவையானால் அதோ தெரிகிறதே எங்கள் வீடு, அங்கு வந்து கேளுங்கள், நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றாள்.

அவனுக்கு இருந்த பேய்ப் பயம் போய்விட்டது. ஆனால் வெட்கம் பிடுங்கித் தின்பது போல் இருந்தது. வீட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். லைட்டைப் போட்டு விட்டுக் கடிதத்தைப் பிரித்து அவசர, அவசரமாக வாசித்தான்.

"மயூரன், அம்மாவும் நானும் அவசரப் பயணமொன்று போகின்றோம். எங்கள் மாமாவுக்குச் சுகமில்லை என்று தகவல் கிடைத்ததால் போகிறோம். நிலைமை எப்படி இருக்கிறதென்று பார்த்து விட்டு நான் மட்டுமாவது வந்து விடுகிறேன். அது வரை உனக்குத் தேவையான அலுவல்களை முடித்துக் கொண்டு வீட்டில் இரு. பக்கத்து வீட்டு அக்காவிடம் சொல்லியிருக்கிறோம். உனக்கு எது தேவையானாலும் அங்கு போய்க் கேள். இரவுச் சாப்பாடு தயாராக உள்ளது. உனக்காகவே விசேடமாக ஆட்டிறைச்சி சமைத்து வைத்திருக்கிறாள் அம்மா. கொழும்புக்குப் போனதில் இருந்து இறைச்சியில் கலப்படம் செய்யக்கூடும் என்ற பயத்தில் ஆட்டிறைச்சி சாப்பிடுவதையே நிறுத்தி விட்டதாகவும் இங்கு வந்துதான் ஆட்டிறைச்சி சாப்பிட வேண்டும் என்றும் ஒருமுறை எழுதியிருந்தாய் அல்லவா? அதனால் தான் அம்மா இன்று விசேடமாக ஆட்டிறைச்சி சமைத்தார்கள்." என்று எழுதியிருந்தான் முகுந்தன். அதை வாசித்ததும் மயூரனுக்கு எரிச்சல், எரிச்சலாக வந்தது.

"ச்சே! யாருக்கு வேண்டும் இந்தச் சாப்பாடு? நானே பேய்ப் பயத்தில் இருக்கின்றேன். இந்த நேரத்தில் இறைச்சிக் கறி வேண்டுமா? இறைச்சிக் கறிக்குப் பேய் வருமென்று சொல்வார்கள். நான் எப்படி அதைச் சாப்பிட்டு விட்டு இந்த வீட்டில் தனியாக இருப்பது"? என்று பலவாறு யோசித்தான்.

"இன்று பசியோடு படுக்க வேண்டியதுதான்" என்று நினைத்துக் கொண்டு படுக்கையில் போய் "தொப்" என்று விழுந்தான். எவ்வளவோ முயற்சித்தும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. சாதாரணமாகவே சாப்பிடாமல் படுத்தால், அவனுக்குத் தூக்கம் வராது. இன்று பேய்ப் பயம் வேறு! எப்படித் தூக்கம் வரும்? வெறும் சோற்றையாவது சாப்பிட்டு விட்டு வருவோம் என்று, நினைத்து அடுக்களைக்குள் நுழைந்தான். கோப்பையில் சோற்றைப் போட்டான். இறைச்சிக் கறி மணம் மூக்கைத் துளைத்த போதும் அதனை எடுக்காமல் வெறும் சோற்றைச் சாப்பிட்டுப் பார்த்தான். அவனால் சாப்பிட முடியவில்லை.

"சரி, கொஞ்சம் சொதியை மட்டும் ஊற்றி சாப்பிடுவோம்" என்று நினைத்தபடி சோற்றில் கொஞ்சம் சொதியை ஊற்றினான். பின் வந்து சாப்பிட்ட போது, மிகச் சுவையாக இருந்தது. இறைச்சி கொஞ்சம் சாப்பிட வேண்டும் போல்



இருந்தது.

"ச்சே! பேயாவது, மண்ணாவது இப்படியெல்லாம் பயந்து வாழக்கூடாது. சாப்பிடக் கூடப் பயப்பட வேண்டுமா?" என்று நினைத்தவன், இறைச்சித் துண்டங்களைத் தாராளமாக எடுத்துக் கோப்பையில் போட்டான். பின்னர் அடுக்களையிலேயே ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த படி சாப்பிடத் தொடங்கினான். இறைச்சித் துண்டங்களை எடுத்துக் கடித்துச் சுவைத்துச் சாப்பிடலானான். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே அவனுக்கு ஒரு யோசனை ஏற்பட்டது.

"இந்த நள்ளிரவு நேரத்தில் இந்த வீட்டில் தனியாக இருந்து இறைச்சி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோமே" என்று நினைத்தான். அப்படி நினைக்கையில் அவனுக்குச் சிறிது அச்சமாகத்தான் இருந்தது. பின்னர் தன்னை யாரோ பார்த்துக் கொண்டிருப்பது போல் உணர்ந்து தலையை நிமிர்த்திப் பார்த்தான். அங்கே............. கரிய ஓர் உருவம் அவனையே கூர்ந்து பார்த்த படி உட்கார்ந்து கொண்டிருந்தது.

(தொடரும்)

# 2800 நத்தார் தாத்தாக்கள்



நத்தார் தினம் என்றாலே நத்தார் தாத்தாமாரின் உருவத்தை ஆங்காங்கே பல இடங்களிலும் காணலாம். ஆனால் ஒரே இடத்தில் 2800 நத்தார் தாத்தாமார் கூடிவிட்டால் எப்படியிருக்கும்? நிஜமாகவே அப்படி நடந்து விட்டது. எங்கு தெரியுமா? ஜேர்மன் நாட்டில்தான்! அங்கு ரூஸ்ட் எனும் நகரிலேயே இவ்வாறு 2800 நத்தார் தாத்தாமார் அணி திரண்டனர். நத்தார் தினத்தை வரவேற்கும் அடையாளத்தை உணர்த்தும் விதமாகவே ஏற்பாட்டுக் குழுவினர் இவ்வாறு நத்தார் தாத்தாமாரை அணிதிரட்டிக் கண்கொள்ளாக் காட்சியாக்கி விட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நஸ்ருதீன் கோஜாவின் விகடங்கள்

இந்தியாவின் தெனாலி இராமனைப் போல் ரஷ்யாவின் நஸ்ருதீன் கோஜாவின் விகடங்கள் கீழைத்தேச நாடெங்கும் பெயர் பெற்றவை. இவை தொகுக்கப்பட்டு நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளன.
இங்கு உதாரணத்துக்கு மூன்று விகடச் சம்பவங்கள் சித்தரிக்கப்படுகின்றன. அக்காலத்தில் ரஷ்யாவில் ஆட்சி செய்த கொடுங்கோல் சக்கரவர்த்தி டேமர்லின் என்ற மன்னனுடனான கற்பனைச் சந்திப்புக்களின் உரையாடல்களே இவை.

## பேராசை

ஒரு முறை நஸ்ருதீனின் காய்கறித் தோட்டத்தில் அதிக அளவில் வெள்ளரிக்காய் காய்த்துக் குலுங்கியது. அதனால் பறவைகளிடம் இருந்தும், மிருகங்களிடம் இருந்தும் அவைகளைப் பாது காக்க வேண்டியிருந்தது. அதற்காக அக்கா லத்தில் நஸ்ருதீன், தோட்டத்துக் கொட்டிலில் தங்கியிருந்தார்.
ஒரு நாள் அவ்வழியாக வந்த பெரிய மனிதர்கள் மூவர் நஸ்ருதீனின் கொட்டிலுக்கு வந்தனர். அவர்களில் ஒருவர் சொன்னார்,
"நாங்கள் வேட்டையாடுவதற்கு வந்தோம் எங்க ...கு களைப்பாகவும், பசியாகவும் இருக் ...றது.."
நஸ்ருதீன் அவர்களுக்கு வெள்ளரிக்காய் உண்ணக் கொடுத்து தேநீர் விருந்தளித்தார்.




அதன்பின் வந்த விருந்தினர்கள் சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு புறப்பட ஆயத்தமாகினர். அப்போது அவர்கள் ஒவ்வொருவருக்கும் நஸ்ரு தீன் வெள்ளரிக்காய்ப் பொதியொன்றை அன்பளிப் பாக வழங்கினார்.
விருந்தினர்களில் இருவர் நஸ்ருதீன் வழங்கிய அன்பளிப்பினைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண் டனர். ஆனால் மூன்றாவது விருந்தினர் தனக்கு நான்கு வெள்ளரிக்காய்ப் பொதி வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.
அதனைக் கேட்ட நஸ்ருதீன், அவர் காலில் விழுந்து வணங்கி "டேமர்லேன் மன்னரே! நீங்கள் நீடூழி வாழ்க!" என்றார்.
அதனால் ஆச்சரியப்பட்ட டேமர்லின் மன்னன் "நான் மன்னன் என்பது உமக்கெப்படித் தெரியும்....?" என்றார்.
"உங்கள் பேராசையே காட்டிக்கொடுத்து விட் டது. உலகின் பேராசைகளுக்கெல்லாம் நீர் சக்கரவர்த்தி அல்லவா?" என்றார் சிரித்துக் கொண்டே.....

## டேமர்லினின் பெருமை

டேமர்லின் மன்னன் எப்போதும் அவனது பெருமை பற்றியே பலரும் பேசவேண்டுமென்று விரும்பினான். ஆதலால் மன்ன னைக் காண்போர் எல்லாம் எப் போதும் அவன் காது பட அவ னது பெருமை பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.
ஒருமுறை ஒருவன் கூறினான், "உலகத்தில் எவ்வளவு உயர் வானவர்கள் இருந்தாலும் அவர் கள் எல்லாரைம் விட உயர்வா னவன் தான் நம் மன்னன் டே மர்லின். அவரை விட உயர்ந் தவர் இருக்கவே முடியாது"
இதனை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த நஸ்ருதீன் சொன் னான்.
"ஆகா.. ஆகா.. எத்தனை பெரு மை என்றாலும் நன்றாக வளர் ச்சியடைந்த ஒரு ஒட்டகம் உன் மன்னனை விட உயர்ந்தது"

## டேமர்லின் மன்னனின் கவித்துவம்

ஒரு சமயம் டேமர்லின் மன்னன் செய்வதற்கு ஒன்றுமில்லையெனத் தவித்துக் கொண்டிருந் தான். எனவே கவிதை எழுதினால் என்ன என்று அவனுக்குத் தோன்றியது. அவன் கவி தை வரிகளைக் கிறுக்கி விட்டு அதனை விமர்ச னம் செய்ய நஸ்ருதீனை அழைத்து வரச் சொன்னான்.
அதனை வாசித்துப் பார்த்த நஸ்ருதீன் "இவை மிக மோசமான கவிதைகள். உன்னால் முடி யாத செயலை ஏன் செய்யப் போகிறாய்" என்று கேட்டான்.
இதனைக் கேட்ட மன்னனுக்குப் பெரும் கோபம் வந்து விட்டது. உடனே நஸ்ருதீனைக் கழுதை லாயத்தில் பிடித்துக் கட்டி விடும்படி பணித்து விட்டான்.
சில நாட்கள் கழிந்து போய்விட்டன. அந்த நாட்களில் மன்னன் டேமர்லின் மேலும் பல கவிதைகளை எழுதினான். மறுபடியும், அத னைப் படித்துப் பார்த்து விமர்சனம் செய்யும் பொருட்டு நஸ்ருதீனை அழைத்து வரச் சொன்னான்.
அழைத்து வரப்பட்ட நஸ்ருதீன் மன்னன் எழுதியிருந்த கவிதைகளைப் படித்துப் பார்த்து விட்டு ஒன்றுமே பேசாமல் வந்த பாதையில் நடக்கத் தொடங்கினான்.
"எங்கே போகிறீர்கள்" மன்னன் ஆவலுடன் விசாரித்தான்.
"கழுதை லாயத்துக்கு" நஸ்ருதீன் பதிலளித்து விட்டுத் தொடர்ந்து நடந்தான்.



## அறிவியற் கலசம் (தொடர்ச்சி..)

ஆசிரியர் : இதற்கு விளக்கம் தேவையில்லை. மணிமாறன் சஞ்சிகையில் படித்தது சரியே!
இ்.து, இயற்கையின் விதி. ஒரு பொருள் ஒருவரு க்கு அமிர்தமாக இருக்க, இன்னொருவருக்கு அதே பொருள் நஞ்சாக இருப்பதில்லையா? அது போல் இதனையும் எடுத்துக் கொள்வோம்.
இதனை அறிவியல் நோக்கில் கூறினால்... பெண் நுளம்பு கருக் கொள்வதற்கு.. கருவைப் பேணுவ தற்கு ஊட்டச் சத்தாக நமது இரத்தம் அதற்குத் தேவைப்படுகின்றது. அதை மனிதனிடந்தான் அது பெற முடியும். ஆண் நுளம்பு அதனைப் பெற்றுத் தன் விந்தணுவை வளப்படுத்துகிறது. தன் இனத் தைப் பெருக்க வழி செய்கிறது. வேண்டுமாயின், நாம் ஒதுங்கிக் கொள்ளலாம். அல்லது அதன் வாழ்வைத் துண்டித்துத் தடுக்கலாம்.
நல்லது மாணவர்களே, இத்தோடு நமது கேள்விக ளையும் உரையாடல்களையும் இத்துடன் நிறுத்தி அடுத்த முறை சந்தித்து உரையாடுவோம்.

மாணவர்கள் : நன்றி சேர்.... வணக்கம்.

தமிழில்
சிங்களப் பாடம்
ஆரம்பம்.......



எளிமையான நடையில் சகலரும் புரியும் விதமாக 'விஜய்' யில் சிங்கள பாடப் பகுதியொன்று ஆரம்பமாகவுள்ளது.
எப்போது..?
காத்திருங்கள் அடுத்த இதழில் அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 14 வயதிற்குக் கீழானோருக்கான போட்டித் தொடர்!

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மலேஷியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 14 வயதிற்குக் கீழ்ப்பட்ட, பாடசாலை மட்ட மாணவர்களுக்கிடையேயான 'நெல்சன் மென்டிஸ்' கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடர், டிசம்பர் 13 தொடக்கம் 23 வரை 'நடைபெறுகின்றது. இந்தப் போட்டித் தொடரில் நான்கு பிரிவுகளாக முதல் சுற்றுப் போட்டிகள், லீக் முறையில் நடைபெறுவதோடு ஒவ்வொரு பிரிவிலிருந்தும் செம்பியன் அணி தெரிவுசெய்யப்படும்.

முதல் சுற்றின் போது ஒவ்வொரு அணிக்கும் 30 ஓவர்கள் வழங்கப்படும். அரையிறுதி, இறுதிப் போட்டிகளில் 45 ஓவர்கள் வழங்கப்படும்.

போட்டித் தொடரின் இறுதியில் தெரிவு செய்யப்படும் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள், பந்து வீச்சாளர்கள், பந்துத் தடுப்பாளர்கள் ஆகியோருக்கு வெற்றிப் பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

## கலுவித்தாரணவின் கிரிக்கெட் உபகரணங்கள் ஏலத்தில்!

இலங்கை அணியின் விக்கெட் காப்பாளராகவும், சிறந்த துடுப்பாட்ட வீராகவும் இருந்த ரொமேஷ் களுவித்தாரண கிரிக்கெட் துறையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளமை நாம் அறிந்ததே.!

புதியவர்களுக்கு வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற நோக்கிலேயே தான் ஓய்வு பெற்றுள்ளதாகத் தெரிவித்துள்ள களுவித்தாரண, மகிழ்ச்சியுடனேயே ஓய்வு பெறுவதாகவும், எவர் மீதும் எந்தவொரு குறையையோ, குற்றச்சாட்டையோ சுமத்த விரும்பவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இதே வேளை, ரொமேஷ் களுவித்தாரண கடைசியாகக் கலந்து




கொண்ட சர்வதேசப் போட்டியின் போது அவர் பாவித்த கிரிக்கெட் உபகரணங்களை ஏலத்தில் விற்று அதில் கிடைத்த நிதியை 'ஹர்மட் பீட் 2004' என்ற நிதியத்திற்கு வழங்கியுள்ளார்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுகின்ற களுவித்தாரண, தனது நிறுவனத்திலுள்ள சக ஊழியர்கள் மத்தியில் ரூ.100 மதிப்புள்ள ஸ்டிக்கர்களை விற்பனை செய்து அதிலிருந்து கிடை[illegible] பணத்தினையும் மேற்படி நிதிய[illegible]திற்கு வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தாயகம் திரும்பியுள்ள மெரடோனா!



போதை மாத்திரைப் பழக்கத்திற்கு அடிமையாகியதனால் அதற்குரிய சிகிச்சைக்காக, கியூபா நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த ஆர்ஜென்ரீனா நாட்டின் உதைபந்தாட்ட வீரர் தியாகொ மெரடோனா நத்தார் தினத்தை முன்னிட்டு மீண்டும் தாய்நாடு திரும்பியுள்ளார். 44 வயதுடைய மெரடோனா போதை மாத்திரை உட்கொண்டமையால், இருதயக் கோளாறிற்கு ஆளாகி ஆபத்தான கட்டத்தில் இருந்தார். ஆயினும் மருத்துவர்களின் கடும் முயற்சியின் பலனாக உயிர் காக்கப்பட்டார். இதனையடுத்தே இவரை முற்றாகச் சுகப்படுத்தும் நோக்கில் கியூபாவில் போதை மருந்துப் பாவனையாளர்களுக்கான சிகிச்சை நிலையத்திற்கு மெரடோனா அனுப்பி வைக்கப்பட்டார். இப்போது அவர் கணிசமான அளவில் சுகப்பட்டுள்ளதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சிம்பாப்வேக்கு ஜனவரியில் டெஸ்ட் அந்தஸ்து!

சிம்பாப்வே கிரிக்கெட் அணிக்கு எதிர்வரும் ஜனவரி தொடக்கம் டெஸ்ட் அந்தஸ்தை வழங்குவதற்குச் சர்வதேசக் கிரிக்கெட் சம்மேளனம் தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

சிம்பாப்வே அணியின் வெள்ளை இன வீரர்களுக்கும், கிரிக்கெட் சபைக்குமிடையில் ஏற்பட்டிருந்த கருத்து பேதத்தின் காரணமாக அந்த அணியின் தலைவராக இருந்த ஹீத் ஸ்ரீக் உட்பட வீரர்கள் பலர் சிம்பாப்வே அணியிலிருந்து வெளியேறியிருந்தனர். இதனால் தயிபு தலைமையிலான கறுப்பினத்தவர்களைக் கொண்ட அணியொன்று உருவாகியது. இருப்பினும் இந்த அணி கிரிக்கெட் களத்தில் ஸ்திரப்படும் வரையில் அதற்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கப்படமாட்டாது எனக் கூறப்பட்டது.

இருப்பினும், களமிறங்கி 6 மாதங்களுக்கு ஓர் அணியானது தமது முழுத்திறமையை வெளிக்காட்டுவதென்பது, இயலாத காரியம் என்ற காரணத்தின் அடிப்படையில் அடுத்த வருடம் தென் ஆபிரிக்காவுடன் டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்வதற்குச் சிம்பாப்வே அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

## சாஃப் போட்டிகள்: இலங்கை பெட்மிடன் அணித் தெரிவு!

இலங்கையில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கென இலங்கையின் சார்பாக 18 பேரைக் கொண்ட பெட்மின்டன் அணியொன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இதில் 10 வீரர்களும், 8 வீராங்கனைகளும் அடங்குகின்றனர். மேற்படி போட்டிகளுக்குரிய பயிற்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## இலங்கை நியூசிலாந்து போட்டித் தொடர்!

இலங்கை-நியூசிலாந்து அணிகளுக்கிடையே நடைபெறவுள்ள சர்வதேச ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டித் தொடர்களுக்கான தின அட்டவணை வருமாறு :-

| | | |
|---|---|---|
| டிசம்பர் | 26 | : 1வது ஒருநாள் போட்டி |
| டிசம்பர் | 29 | : 2வது ஒருநாள் போட்டி |
| ஜனவரி | 02 | : 3வது ஒருநாள் போட்டி |
| ஜனவரி | 04 | : 4வது ஒருநாள் போட்டி |
| ஜனவரி | 08 | : 5வது ஒருநாள் போட்டி |
| ஜனவரி | 15-19 | : 1வது டெஸ்ட் போட்டி |
| ஜனவரி | 22-26 | : 2வது டெஸ்ட் போட்டி |

## கழகமட்ட கால்பந்தாட்டப் போட்டிகள் ஒத்திவைப்பு!

டிசம்பர் மாதம் நடைபெறவிருந்த அகில இலங்கை கழக மட்டத்திலான கால் பந்தாட்டப் போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இலங்கையின் தேசிய கால் பந்தாட்ட அணி மாலைதீவில் போட்டிகளில் கலந்து கொள்ளச் செல்கின்றமையின் காரணமாக, கழக மட்டத்திலும் விளையாடும் இந்த தேசிய அணி வீரர்களுக்கு வாய்ப்பைக் கொடுக்கும் விதமாகவே மேற்படி போட்டிகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

இப்போட்டிகள் ஜனவரி மாதம் மீண்டும் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மாலைதீவில் போட்டிகளில் கலந்து கொள்ளும் தேசிய அணி வீரர்கள் டிசம்பர் 15 இல் மாலைதீவு புறப்படுகின்றனர்.




பங்களாதேஷில் கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கு அந்நாட்டின் இஸ்லாமிய குழுவொன்றினால் கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமையின் காரணமாகப் போட்டி நடைபெறும் அரங்கில் கடுமையான பாதுகாப்புப் போடப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

## பதவி நீக்கம்!

தென் ஆபிரிக்கக் கிரிக்கெட் தேர்வுக் குழுவின் தலைமைப் பதவியிலிருந்த ஓமார் ஹென்றி பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இவர் தொடர்ந்தும் தேர்வுக் குழுவின் உறுப்பினராக இருப்பார் எனவும் மேற்படி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செ.சங்கரி,
தரம் 09,
மட்/வின்சன்ற் ம.உ.பா,
மட்டக்களப்பு.



வி.துஷாரா,
தரம் 07[T],
புனித பிரிஜட்ஸ் கன்னியர்
மடம், தெமட்டகொடை.



ஏ.எஃப்.ஜெஸாஃ,
தரம் 09[A],
தி/அந்-நகார் ம.ம.வி,
மூதூர் 05.



ஜெ.சிந்துஜன்,
தரம் 07[B],
மல்லாகம் ம.வி.



பா.ஜெகநாத்,
தரம் 10[A],
மட்/புனித மிக்கேல் கல்லூரி,
மட்டக்களப்பு.



சு.பவிஷன்யா,
சுவோன் சிறுவர்
பாடசாலை,
அம்பிட்டிய.



சஜிதா,
தரம் 03[B],
கிங்ஸ்டன் சர்வதேச
பாடசாலை, கொழும்பு 15.



எம்.பாத்திமா ஹஸ்னா,
தரம் 03,
மாறை/கிரிந்தை மு.வி,
கிரிந்தை.



எம்.எஃப்.ரிஸ்னா, தரம் 04,
நாத்/அரசினர் முஸ்லிம்
வித்தியாலயம், நாத்தாண்டியா.



எஃப்.அஸ்ரா அன்வர், தரம் 07[A],
களு/ஜீலான் மு.ம.க,
பாணந்துறை.




பிள்ளைகளே!
நீங்களும் உங்கள் கைவண்ணங்களை எமக்கு
அனுப்பிவைக்கலாம்.
உங்கள் சித்திரங்களை A4 தாளில் மாத்திரம் வரைந்து, பெயர்
விபரங்களைச் சித்திரங்களின் பின்புறமாக எழுத மறவாதீர்கள்
அனுப்பவேண்டிய முகவரி:-

'கைவண்ணங்கள்'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

## மாணவி திவ்யாவின் திறமை வெளிப்பாடு!



பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவியான ரா.திவ்யா தனது பாலர் வகுப்பு முதல் இற்றை வரை பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். இவர் பாலர் வகுப்பில் கல்வி கற்கையில்- ஆத்திசூடி ஓதுதல் போட்டி, ஆன்மீக உடைப்போட்டி ஆகியவற்றில் முதலாம் இடத்தையும், தரம் 4 இற்கான ஆங்கில தின எழுத்தாற்றல் போட்டியில் இரண்டாமிடத்தையும், தேவாரப் போட்டியில் மூன்றாம் இடத்தையும், வலய மட்ட ஆங்கிலப் போட்டியில் முதலாமிடத்தையும், தமிழ் மொழித்தின வலய மட்டப் போட்டியில் முதலாம் பிரிவு வாசிப்புப் போட்டியில் முதலாம் இடத்தையும் எனப் பல பரிசில்களையும் இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து, இம்முறை நடைபெற்ற 5 ஆம் ஆண்டிற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்றுப் பாடசாலையில் முதலாம் இடத்தையும், பதுளை மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுச் சித்தியடைந்துள்ள இவர் பதுளையைச் சேர்ந்த ராஜரட்ணம் (ஜே.பி), எழில்மதி தம்பதிகளின் புதல்வியாவார்.

## இசைப்பாடல்

### புகையிரதம்!

புகையிரதம் நிலக்கரியில்
ஓடிய தக்காலம்
புகை கரியில் பயணிகளே
சேர்ந்தனர் அக்காலம்

சிக்குப் புக்கு, சிக்குப் புக்கு
சளைத்திடாமல் ஓடும்
கூ........ எனும் கூக்கு ரயில்
குறை விசையில் ஓடும்

டீசல் எண்ணெய் என்ஜினுக்கு
ஊற்றிடும் இக்காலம்
வேகமுடன் பயணிகளை
விரைவாய் ஏற்றி ஓடும்


சுக்சுக் சுக்சுக் சுக்சுக்
சுறுசுறுப்பாய் ஓடும்
சுகமுடனே பயணிகளும்
சௌகரியம் கொள்வர்

கரிப் புகையைக் கக்கியதால்
புகையிரதம் என்று
உரிமையுடன் பெற்ற பெயர்
இருப்பதின்னும் புதினம்!

சிக்குப்புக்கு, சிக்குப்புக்கு,
சிக்குப்புக்கு வண்டி
சுக்சுக், சுக்சுக், சுக்சுக் வண்டி
இரண்டும் புகையிரதம்!

**கவிஞர் ஏ.இக்பால்**

படத்தை
இங்கே
ஒட்டவும்



பெயர் :.......................................................

முகவரி :.....................................................

...............................................................

பாடசாலை : ...............................................

வகுப்பு : ...................................................


## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டுங்கள் 1






1,2,3,4,5 என இப்பக்கத்தில் இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளைத் தபாலுறையிலிட்டு முகவரிக் கூப்பனை வெட்டி ஒட்டி மாணவர் பெயர், வகுப்பு, பாடசாலை, பாடசாலை முகவரி, நிரந்தர முகவரி, அருகில் உள்ள நகரம், மாவட்டம் முதலான விபரங்களுடன் தபாலில் அனுப்பவும். ஒவ்வொரு பகுதியில் இருந்தும் தெரிவு செய்யப்படும் ஓர் அதிர்ஷ்டசாலிக்குச் சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்)தலா ரூ.150/= பெறுமதியான பண வவுச்சர்களைக் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கும்.

**முகவரிக் கூப்பன்**

அற்லஸ் அறிவுக்கு விருந்து 8
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 5 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

| போட்டி :- 1 | போட்டி :- 2 | போட்டி :- 3 | போட்டி :- 4 |
|---|---|---|---|
| எம்.பீ.எ.ஃப்.ஹப்ஸா, தரம் $04^{C}$, அல் முபாரக் தேசியக் கல்லூரி, மல்வானை. | ஆர்.சிந்துஜா, தரம் $05^{A}$, கே/மாவ/பதுரியா ம.க, மாவனல்லை. | தி.டிஷாண், தரம் $07^{S}$, சிவாநந்தா ம.வி, கல்லடி. | மு.இ.உஸாம் முஹம்மட், தரம் $06^{B}$, கமு/அல் மனார் தே.பா, மருதமுனை. |

## 2 இவ்விரு படங்களுக்கிடையே உள்ள வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



## 3 பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. பம்பரகந்த என்பது,
   * இலங்கையிலுள்ள பெரிய மலைத் தொடர்
   * இலங்கையிலுள்ள பெரிய நீர்விழ்ச்சி
   * சப்ரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள சிறிய குன்று
   * சிவனொளிபாத மலையின் மறுபெயர்

2. **Cheque** எனும் ஆங்கிலச் சொல் குறிப்பது;
   * சரிபார்த்தல்
   * காசுக் கட்டளை
   * காசோலை
   * தேடல்

3. ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று
   * சீவகசிந்தாமணி
   * நீலகேசி
   * திருக்குறள்
   * இராமாயணம்

4. ஆட்டு மந்தை என்பது போல் குதிரை
   * கூட்டம்
   * பிணையல்
   * திரள்
   * மந்தை

## 4 பின்வரும் வசனங்களிலுள்ள பிழைகளை இனங்கண்டு திருத்தி எழுதுக.

1. சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக விளையாட்டு வீரர்கள் குழுவொன்று நேபாளம் நோக்கிப் பயணித்தனர்.

2. ஒரு வயோதிபர் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

3. பிரதி திங்கட் கிழமை தோறும் விளையாட்டுச் செய்திகள் தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகும்.

4. நாளை இடி முழக்கத்துடன் மழை பெய்யுமென்று வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளன.

## 5 குறுக்கெழுத்துப் போட்டி, இல. 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 து | ■ | 3 | 4 | 5 |
| 6 | | 7 | க் | கா | |
| | 8 | | ■ | | |
| ■ | 9 | | | ■ | |
| 10 | ■ | ■ | ■ | 11 | ■ |
| 12 | | ல் | ■ | 13 | |

**அற்லஸ் வழங்கும் 5 ஆம் இலக்கத்திற்குரிய பரிசினை, குறுக்கெழுத்துப் போட்டியை நிரப்பி வெற்றி கொள்ளுங்கள்.**

**மேலிருந்து கீழ்**

1. ஆண் கோழியை இவ்வாறு அழைப்பர்.
2. ஆடைகளில் ஒட்டிக் கொள்ளும் தன்மையுடைய புல்லினமொன்று.
3. பெறுமதி மிக்க மரம்
4. அரண்மனை
5. பாலையும், நீரையும் கலந்து வைத்தால் பாலை மாத்திரம் பிரித்து உண்ணும் பறவை. (குழம்பி)
7. தியாகம் புரிந்தவர் (குழம்பி)
10. காயப்பட்ட புறாவுக்காக இரங்கிய சக்கரவர்த்தி.
11. மரம், கல் செதுக்கல்களுக்காகப் பயன்படும் கருவி.

**இடமிருந்து வலம்**

1. இலங்கை இந்தியக் கடற்பரப்பை மையமாகக் கொண்ட சர்வதேசக் கடல் வழிப் போக்குவரத்துத் திட்டம் இந்தச் சமுத்திரத்தினூடாக ஆரம்பிக்கப்படவுள்ளது.
3. மருந்தாகப் பயன்படும் ஒரு மூலிகை விதை.
6. புனித பாப்பரசரால் நிர்வகிக்கப்படும் சிறிய நிலப்பரப்பைக் கொண்ட நாடு.
8. பயம் நிறைந்த கலக்க உணர்வு. (குழம்பி)
9. சவூதி அராபியாவின் நாணயம்.
12. இசைக் கருவியொன்று.
13. கோயில்களில் செதுக்கப்பட்டுள்ள - சிங்க முகமும், யானையின் துதிக்கையும், தந்தமும் உடைய சிற்பம். (குழம்பி)

பெயர் :- ..........................................
நிரந்தர முகவரி :- ..........................................
பாடசாலை :- ..........................................
பாடசாலை முகவரி :- ..........................................
வகுப்பு :- ..........................................
அருகில் உள்ள நகரம் :- ..........................................
மாவட்டம் :- ..........................................

### போட்டி விதி முறைகள்

1. சரியான விடைகளை உரிய சதுரக் கட்டங்களில் நிரப்பிக் கீழேயுள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து, தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 01.01.2005 திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் குறுக்கெழுத்துப் போட்டி - 17, பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி
எஸ்.அருண் பிரசாத், தரம் $9^{A}$,
ஹைலன்ஸ் மத்திய கல்லூரி,
ஹற்றன்.

எமது முகவரி →
குறுக்கெழுத்துப் போட்டி -19
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### போட்டி. இல - 17இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வெ | ண் | 2 பா | ■ | 3 து | ரு |
| ள் | ■ | 4 லை | க் | கா | ■ |
| 5 ளை | கு | வ | 6 டா | ■ | 7 பா |
| மா | ■ | 8 ன | கா | 9 க | ம் |
| ளி | ■ | ம் | ■ | ப | ■ |
| 10 கை | லி | ■ | பா | டி | ணி |



### பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. ருஸ்தா அமீன், தரம் $08^{B}$, ஜீலான் மு.ம.க, பாணந்துறை.
2. கி.சுதர்சன், தரம் $10^{C}$, புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி, மன்னார்.
3. எ.ஃப்.ஹஸ்னா முத்தலிப், தரம் $10^{B}$, ஹிஸ்புல்லா ம.க, குருநாகல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புகழ்பெற்ற நாடுகாண் பயணிகள்

எஸ். கிறேஸ்

அக்காலத்தில் உலகைச் சுற்றி வந்தவர் என்று புகழ் பெற்றவர் தான் போர்த்துக்கேயக் கப்பல் மாலுமி பேர்னன்ட் மகலன். இவர் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். போர்த்துக்கல் நாட்டிற்காகப் பல யுத்தங்களில் ஈடுபட்ட அவர் மேற்குத் திசை நோக்கிச் சென்றால் வாசனைத் திரவியங்கள் அதிகமுள்ள தீவொன்றைக் கண்டுபிடிக்கலாம் என நம்பினார். இத்தகைய தீவினைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் புதிய உலகம் என்று அழைக்கப்படும் அமெரிக்கக் க...த்திற் கூடாக அல்லது அதனைச் சுற்றிப் ப...ம் செய்தால் மட்டுமே புதிய கண்டு பிடி...புக்களைச் செய்யலாம் என நம்பினார். இதற்குப் போர்த்துக்கேயர் இணக்கம் தெரிவிக்கவில்லை. ஆனால் மகலனின் உலகைச் சுற்றி வரும் விருப்பத்திற்கேற்ப ஸ்பா... அரசன் சார்ள்ஸ் இணங்கினான். இதனைத் தொடர்ந்து அவரின் உதவியுடன் 1518 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 22 ஆம் திகதி மகலன் தன் முதற் பயணத்தைத் தொடர்ந்தார்.

டிரினிடாட், சென் அந்தோனியோ, கொன்செப்சன், விக்டோரியா மற்றும் சந்தியாகோ எனும் பெயருள்ள ஐந்து கப்பல்களில் சுமார் 270 பேருடன் தன் முதற் பயணத்தை இவர் தொடர்ந்தார். 1519 ஆம் திகதி டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி பிறேசில் நாட்டை அண்மித்தார். போர்த்துக்கேய ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாட்டிற்கருகில் ஸ்பானியக் கொடியுடன் கூடிய கப்பல்களில் பயணம் செய்வது மிக அபாயகரமானது என்பதை உணர்ந்த மகலன் போர்த்துக் கேயருடன் சமாதானமாகப் பேசித் தங்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களைப் பெற்றுக் கொண்டு தெற்கு நோக்கிப் பயணத்தை மேற்கொண்டார். இவர்கள் பிரயாணம் செய்த காலம் தென் பகுதியில் மிகவும் குளிராகக் காணப்பட்டமையால் குளிர் குறைந்து செல்லும் வரையில் பற்றகோனியா பிரதேசத்தில் தங்கியிருந்தார். இன்று இப்பிரதேசம் ஆர்ஜன்டினா என்று அழைக்கப்படுகின்றது. இங்கு வைத்து மகலனைக் கொலை செய்வதற்கான முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்ட போதும் அது தோல்வியில் முடிவடைந்தது.

குளிர் காலம் முடியும் வரையில் இங்கு பல நெருக்கடிகளை இவர் சந்தித்தார். 1520 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் திரும்பவும் தனது பயணத்தை மகலன் ஆரம்பித்தார். அப்போது அவரின் சந்தியாகோ கப்பல் கைவசமிருக்கவில்லை. மிக விரைவிலேயே வாசனைத் திரவியங்கள் காணப்படும் தீவினைக் கண்டுபிடிக்கலாம் என மகலன் நினைத்த போதும் அது சாத்தியப்படவில்லை. பல நாட்கள் பிரயாணத்தின் பின் 1521 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு தீவினைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் வெற்றி கண்டார். அவர் இறுதியில் பிலிப்பைன்ஸ் தீவினைக் கண்டுபிடித்த போதிலும் அங்கு நடைபெற்ற சண்டையில் மகலன் இறந்தார். அங்கு அவருக்குச் சொந்தமான இன்னுமொரு கப்பலும் காணாமற் போனது. ஆனாலும் இவருடன் சென்ற மற்ற இரு கப்பல்கள் வாசனைத் திரவியங்களுடன் ஆபிரிக்கக் கரையைச் சுற்றிப் பிரயாணம் செய்து திரும்பவும் ஸ்பானியா வந்தடைந்தன. எனினும் இடையில் ஏற்பட்ட கலகத்தில் டிரினிடாட் என்ற கப்பல் காணாமல் போனது. தொடர்ந்து முயற்சியால் 98 பேரைக் கொண்ட விக்டோரியா என்ற கப்பல் 3 வருடங்களின் பின் திரும்பவும் ஸ்பானியா வந்தடைந்தது.

## பேர்டினன்ட் மகலன்
## கி.பி. 1480-1521





# அற்லஸ் சித்ரு அகில இலங்கைச் சித்திரப் போட்டி 4(2005)



அன்புமிக்க மாணவர்களே,

உங்கள் படைப்பாற்றல்களை ஊக்குவிக்கு முகமாக "அற்லஸ் சித்ரு" அகில இலங்கைச் சித்திரப் போட்டியை நடத்துவதற்கு, வரையறுக்கப்பட்ட சிலோன் பென்சில் நிறுவனம் முன் வந்துள்ளது. கல்வி அமைச்சின் பூரண அங்கீகாரத்துடனும், மேற்பார்வையுடனும், நடைபெறுகின்ற இந்தச் சி... போட்டியின் மூலம், பல ஆயிரம் பெறுமதி மிக்க பரிசில்கள், அற்லஸ் பாடசாலை உ...ங்கள், பெறுமதிமிக்க சான்றிதழ்கள் ஆகியன வழங்கப்படவுள்ளன. உங்களுக்கு விருப்பமான ஒரு தலைப்பில் சித்திரமொன்றை வரையலாம். "பெஸ்டல்" வர்ணங்களால் மட்டும் சித்திரங்கள் வரையப்பட வேண்டும்.

## போட்டி விபரங்களும், விதிமுறைகளும்

* ஒருவர் ஒரு சித்திரத்தை மாத்திரமே அனுப்புதல் வேண்டும்.
* 35 செ.மீ 45 செ.மீ அளவுடைய தாளில் வரையப்படல் வேண்டும்.
* பெஸ்டல் வகை வர்ணங்கள் கொண்டு வரையப்படல் வேண்டும்.
* உங்கள் சித்திரங்கள், "அற்லஸ் சித்ரு சித்திரப் போட்டி 4(2005), லங்கா பென்சில் நிறுவனம், இல.96, பராக்கிரம றோட், பேலியகொட." என்ற முகவரிக்கு 2005.01.07 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, விஜய நியூஸ் பேப்பர் நிறுவனத்தின் வெளியீடுகளான விஜய், Funday Times, விஜய ஆகிய பத்திரிகைகளில் வெளிவருகின்ற கூப்பனையோ அல்லது அதற்குச் சமமான கூப்பனையோ தயாரித்துப் பாடசாலை ஓவியப் பாட ஆசிரியரின் கையொப்பத்துடனும், பாடசாலை அதிபரின் முத்திரையுடனான கையொப்பத்துடனும் உறுதிப் படுத்தி அனுப்பப்படல் வேண்டும்.
* சித்திரத்தை நீங்கள் "அற்லஸ் பெஸ்" கொண்டு வர்ணம் தீட்டியிருப்பின் அற்லஸ் சிகப்பு நிற பெஸ்டல் வர்ணப் பூச்சின் உறையொன்றைச் சித்திரத்தின் பின்புறமாக ஒட்டி அனுப்பினால் நமது நிறுவனம் அற்லஸ் பெஸ் தொடர்பாக மேற்கொள்கின்ற ஆய்விற்கு அதனைச் சேர்த்துக் கொள்ள முடியும். (ஆனால் வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இது எவ்வகையிலும் சம்பந்தப்படாது)
* கல்வி அமைச்சின் அதிகாரிகள் உட்படத் தகுதி வாய்ந்த நடுவர் குழுவொன்றினால் சிறந்த சித்திரங்கள் தேர்ந்தெடுக்கப்படும். நடுவர் குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.
* போட்டிக்கு அனுப்பப்படும் சித்திரங்கள் எக்காரணங்களைக் கொண்டும் மீண்டும் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.
* இப்போட்டியில் விஜய நியூஸ்பேப்பர்ஸ், சிலோன் பென்சில் கம்பனி நிறுவன ஊழியர்களின் குடும்பத்தினர் பங்கு பற்றுவதற்கு அனுமதி கிடையாது.

போட்டி முடிவுகள் விஜய், Funday Times, விஜய ஆகிய பத்திரிகைகளிலும் ஐ.ரி.என் தொலைக்காட்சியிலும், லக்ஹண்ட வானொலி ஒலிபரப்பிலும் வெளியிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 011-2912874, 2912879 என்ற தொலைபேசி இலக்கங்களில் சிலோன் பென்சில் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## பணப் பரிசு விபரங்கள்

| தரம் | முதலாமிடம் | இரண்டாமிடம் | மூன்றாமிடம் |
|---|---|---|---|
| தரம் 1-2 | 3,500.00 | 2,500.00 | 1,500.00 |
| தரம் 3-4 | 4,000.00 | 3,000.00 | 2,000.00 |
| தரம் 5-6 | 4,500.00 | 3,500.00 | 2,500.00 |
| தரம் 7-8 | 5,000.00 | 4,000.00 | 3,000.00 |
| தரம் 9-10 | 5,500.00 | 4,500.00 | 3,500.00 |
| தரம் 11-12-13 | 6,000.00 | 5,000.00 | 4,000.00 |

தேசிய மட்டத்தில் வெற்றி பெறும் அனைத்து வெற்றியாளர்களுக்கும், பணப் பரிசில்களுடன் அற்லஸ் தயாரிப்புக்கள் அடங்கிய பரிசுப் பொதியொன்றும், வெற்றிக் கிண்ணமும், பெறுமதிமிக்க சான்றிதழ் ஆகியனவும் வழங்கப்படும். மாகாண மட்டத்தில் வெற்றியீட்டும் அனைத்து வெற்றியாளர்களுக்கும் அற்லஸ் தயாரிப்புக்கள் அடங்கிய பரிசுப் பொதியும், சான்றிதழும், வெற்றியீட்டாத போதிலும், கண்காட்சிக்கெனத் தெரிவு செய்யப்படும் சித்திரங்களுக்குச் சான்றிதழ்களும், அற்லஸ் தயாரிப்புக்கள் அடங்கிய பரிசுப் பொதியொன்றும், கண்காட்சிக்கெனத் தெரிவு செய்யப்படாத சித்திரங்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## வெற்றியாளர்கள் தெரிவு

முதல் சுற்றின் படி நாடளாவிய ரீதியிலிருந்து சிறந்த சித்திரங்களை அனுப்புவோர் தெரிவு செய்யப்பட்டுக் கொழும்பிலுள்ள பிரதான பாடசாலை ஒன்றிற்கு அழைக்கப்படுவர். அங்கு கல்வி அமைச்சைச் சேர்ந்தவர்கள் உட்படத் தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் வழங்கப்படும் தலைப்பின் கீழான சித்திரமொன்றை வரைவதற்குப் பணிக்கப்படுவர். இதிலிருந்து தெரிவு செய்யப்படும் சிறந்த சித்திரங்களிலிருந்தே அனைத்து மட்டத்திலான வெற்றியாளர்களும் தெரிவு செய்யப்படுவர்.

## சிறப்பு மலர்

தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் வெற்றியீட்டும் சித்திரங்கள் உட்பட வெற்றியாளர்களின் விபரங்கள் அடங்கிய சிறப்பு மலரொன்றும் வெளியிடப்படும்.

## சித்திரக் கண்காட்சியும், பரிசு வழங்கும் விழாவும்

2005 ஆம் ஆண்டு மே மாதத்திற்குள் கொழும்பில் நடைபெறவுள்ள இந்தக் கண்காட்சியில், சகல மாகாண மட்ட வெற்றியாளர்களின் சித்திரங்களும், தேசிய மட்ட வெற்றியாளர்களின் சித்திரங்களும் உட்பட, ஒவ்வொரு பிரிவிலிருந்தும் 50 சித்திரங்கள் வீதம் 300 சித்திரங்கள் தெரிவு செய்யப்பட்டு அவையே கண்காட்சிக்கு வைக்கப்படும்.

கண்காட்சியின் இறுதியில் தேசிய, மாகாண மட்ட வெற்றியாளர்கள் அனைவருக்கும் அமைச்சர்கள், ஓவியத்துறையில் சிறந்து விளங்கும் புகழ் பெற்ற கலைஞர்கள் ஆகியோரினால் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேற்படி, போட்டியில் பங்கு பற்றிச் சான்றிதழ்கள் மட்டுமே வெற்றி கொள்ளும் போட்டியாளர்களுக்கான சான்றிதழ்கள் அவர்களின் பாடசாலைக்கோ அல்லது வீட்டு முகவரிக்கோ பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### மாதிரிக் கூப்பன்

கல்வி அமைச்சின் முழு அங்கீகாரத்துடனும், மேற்பார்வையின் கீழும் வரையறுக்கப்பட்ட சிலோன் பென்சில் நிறுவனம், பாடசாலை மாணவர்களுக்காக நடத்தும்...

**சித்ரு தேசிய மட்ட சித்திரப் போட்டி 4(2005)**

முதலெழுத்துடன் மாணவன்/மாணவி பெயர்:- ..............................

முகவரி:- ..............................

பாடசாலையின் பெயர்/முகவரி:- ..............................

2004 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் வகுப்பு/தரம்:- ............

மாவட்டம்:- .............................. மாகாணம்:- ..............................

சித்திரத்தின் தலைப்பு:- ..............................

விண்ணப்பதாரியின் கையொப்பம்:- ..............................

குறிப்பு:- பெயர், முகவரி மற்றும் பாடசாலை ஆகியவற்றை ஆங்கிலத் தனி எழுத்துக்களில் எழுதவும்.

மேற்படி, சித்திரம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பெயரைக் கொண்ட மாணவன்/மாணவியினது சுய ஆக்கம் என்பதை உறுதிப் படுத்துகிறேன்.

ஓவியப் பாட ஆசிரியர்/ஆசிரியையின் கையொப்பம் ..............................

பாடசாலை அதிபரின் கையொப்பம் ..............................

பிரதான அனுசரணை,
போட்டி அமைப்பாளர்கள்
எண்ணத்தின் வண்ணங்களை உலகிற்குத் தரும்
அற்லஸ்

ஊடக அனுசரணை

விஜய் | Sri Lanka | லக்ஹட RADIO ITN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதியிலுள்ள விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் 2004 டிசம்பர் மாதம் 20ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 2, on December 20. 2004